
GOKULAM

# கோகுலம்

ஜூலை '97 ரூ. 5/-






# கோகுலம்

ஜூலை 1997
மலர் : 15 இதழ் : 6


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்



## அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். புதிய வகுப்பு, புதிய பள்ளி, புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர் என்று எல்லாம் புதிதாக இருக்குமே? சிலருக்கு புதிய ஊராகவும்கூட இருக்குமே? இதைப் பற்றி உடனே எழுதுங்கள்.

சென்ற இதழில், நீங்கள் படித்து ரசித்த துணுக்குகளைக் கூட எழுதி அனுப்பலாம் என்று எழுதியிருந்தேன். இவைகளை எழுதுவோருக்கு ஒரு வேண்டுகோள். இயன்ற வரை தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் இருந்து துணுக்குகளை எடுத்து எழுதாதீர்கள். இவைகளுக்கு ஆதாரமான பத்திரிகை அல்லது புத்தகத்தையும் உங்கள் வகுப்பு, பள்ளி முகவரியையும் அவசியம் குறிப்பிட வேண்டும்.

இந்தக் கோடை விடுமுறையில் உங்கள் படைப்பாக ஏராளமான கதை, பாடல்கள் எல்லாம் வந்துள்ளன. ஆனால் பெரும்பாலானவற்றில் உங்கள் முகவரி இல்லை! கோகுலத்திற்கு என்று இல்லை; யாருக்குக் கடிதம் எழுதினாலும் சரி, பத்திரிகைகளுக்கே கதை கட்டுரை, கடிதம் எழுதினாலும் சரி, உங்கள் முகவரியைக் கண்டிப்பாக எழுத வேண்டும். மேல் உறையில் எழுதினால் மட்டும் போதாது. உள்ளே, நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு படைப்பிலும் முகவரி இருக்க வேண்டும்.


கோகுலத்தில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. தம்பி தங்கைகள் அதிகம் அளவில் பங்கு கொள்ள ஏற்றதாக இவை இருக்கும்.

உங்களுக்கு மகிழ்ச்சிதானே? மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



# கோகுலம்

## ஜூலை 1997

## இந்த இதழில்...



இரண்டு மாம்பழக் குருவிகளும் கருவேல மரக்கிளையில் வந்து உட்கார்ந்தன.

“கூடுகட்ட இந்த மரம் ஏற்றதுன்னு எப்படிச் சொல்றே?” – கேட்டது பெண் குருவி.

“ஏன்னா, இந்த மரத்துல கரிச்சான் இருக்கு. இது இருக்கும் இடத்தில் பாதுகாப்பு இருக்கும். போன தடவை சப்போட்டா மரத்துல கூடு கட்டினோம். அணில் வந்து கூட்டைப் பிரிச்சு, முட்டைகளை எல்லாம் கீழே தள்ளி உடைச்சிடுத்து. நம்மால எதுவுமே பண்ண முடியலே...”

“அந்த மாதிரி இந்த மரத்துக்கும் அணில் வந்து கூட்டைக் கலைச்சு முட்டைகளைத் தள்ளி உடைக்காதுன்னு என்ன நிச்சயம்?”

“கண்டிப்பாக் கலைக்காது. ஏன்னா இந்த மரத்தில் கரிச்சான் குருவி குடும்பம் நடத்துது. பெரிய பறவைகளின் தாக்குதலுக்குக் கூட இவை பயப்படாமல் எதிர்க்கும். அதனால் பெரிய பறவைகளும் அஞ்சும், நம்மைப் போன்ற சிறிய பறவைகளெல்லாம் கரிச்சான் வாழும் மரங்களைத் தேடி வந்து கூடு கட்டுவது வழக்கம். நாம் இங்கே நம்பிக்கையோடு கூடு கட்டலாம்” என்றது ஆண் குருவி.

“விர்...” – சத்தத்தோடு இரண்டு கரிச்சான் குருவிகள் எதிர்க் கிளையில் வந்து உட்கார்ந்தன. பார்ப்பதற்குப் பெரிய காக்கையைப் போல் இருந்தன இரண்டும். நீளமான பிளவுபட்ட வால். காகத்திற்குப் பாலீஷ் போட்ட மாதிரி பளபளக்கும் கறுப்பு நிறம். கண்விழிப்படலம் மட்டும் சிவந்த பழுப்பு நிறம். ஒன்றின் அலகில் ஒரு தும்பி. இரண்டாவது, ஒரு கம்பளிப் பூச்சியைப் பிடித்து வந்திருந்தது. இரண்டும் அவசரம் அவசரமாக உணவை முடித்துக் கொண்டன.

உணவை முடித்துக் கொண்ட இரண்டு கரிச்சான்களும் எதிர்க் கிளையில் உட்கார்ந்திருந்த மாம்பழக்

குருவிகளை உறுத்துப் பார்த்தன.

"என்ன, கூடுகட்ட நோட்டம் பார்க்க வந்தீங்களா? ஏற்கெனவே மரம் நிறைஞ்சு இருக்கு. எல்லாரும் எங்களை நம்பி வந்து கூடு கட்டறாங்க. வர்றவங்க போறவங்ககிட்ட எல்லாம் நாங்க சண்டை போட்டு சண்டைக்காரப் பறவைன்னு பேரெடுத்தாச்சு. இதுல புதுசா நீங்க வேறயா? இங்க இனிமே யாரும் கூடு கட்டக் கூடாது. வேற மரம் பாருங்க..." என்று கத்திய பெண் கரிச்சான் 'விருட்'டென்று பறந்து போனது.

மாம்பழக் குருவிகள் இரண்டும் ஏமாற்றத்துடன் ஒன்றை ஒன்று பரிதாபமாகப் பார்த்துக் கொண்டன.

"என் மனைவி கத்தினதை நினைச்சு கவலைப்படாதீங்க. அவள் பொல்லாத சண்டைக்காரிதான்



# கரிச்சான் எப்பொழுது எழும்?

ஆண் கரிச்சான்.

இருந்தலும் கூட இரக்கமுள்ளவள்! அதிலும் இப்போ முட்டையிடப் போகும் நிலை. அதனால் கோபமும், சண்டைக் குணமும் ரொம்ப அதிகமா இருக்கும். நீங்க பாட்டுக்கு கூடு கட்டுங்க. அவ திரும்பி வந்ததும் கத்தி சண்டைக்கு இழுப்பா. பதிலே பேசாதீங்க. குஞ்சு பொரிச்சதும் இந்தக் கோபம் ஆத்திரம் எல்லாம் பறந்து போயிடும்" என்று தைரியம் கூறிவிட்டுப் பறந்தது

மார்கழி மாதப் பனியில் கருவேலமரம் நனைந்து கொண்டிருந்தது. மரத்தில் கூடுகட்டிக் குடும்பம் நடத்திய பறவைகள் எல்லாம் இன்னும் எழவில்லை. ஆனால் கரிச்சான்கள் மட்டும் 'கீச் கீச்' என்று கத்தி உதயத்திற்கு வரவேற்பளித்துக் கொண்டிருந்தன.

வீட்டுக்கார அம்மாள் திருப்பாவை

**ரேவதி**

பாடும் குரல் கேட்டது.

"கிசு கிசென்று ஆனைச்சாத்தன் கலந்து" – ஆண்டாள் பாசுரத்தை அந்த அம்மாள் பக்தி உணர்வோடு பாடிக் கொண்டிருந்தாள்.

"கேட்டயா பாட்டை! கரிச்சான்னு மனிதங்க நமக்குப் பேர் வைச்சாலும், நம்ம சொந்தப் பெயர் ஆனைச்சாத்தன்தான். ஆண்டாள் திருப்பாவைல, நாம அதிகாலையில் எழுந்து வருவதைப் பத்தி ரொம்பப் புகழ்ந்து பாடியிருக்கிறாள். வீட்டுக்கார அம்மா அதைத்தான் பாடறாங்க. வா போய்க் கேட்கலாம்" என்று அழைத்தது ஆண் கரிச்சான். 'நாங்களும்' என்று முன்வந்தன குஞ்சுகள் இரண்டும். கரிச்சான் குடும்பமே ஜன்னல் வழியாகப் பறந்து பூஜை அறையின் துணிக்கொடியில் உட்கார்ந்தன.



'கிசுகிசென்று' பாசுரம் பாதியிலேயே நின்றது. வீட்டுக்கார அம்மாள் கொடிக் கம்பியில் வரிசையாக அமர்ந்த கரிச்சான்களைப் பார்த்தாள் வெறுப்போடு.

"எத்தனை தைரியம் பார்த்தீங்களா இந்தக் கரிச்சான் குருவிகளுக்கு! வீட்டுக்குள்ளேயே வந்துடுத்தே! காலங்கார்த்தால எழுந்ததும் இதுங்க கரிமுகத்துல முழிக்கும்படி இருக்கே!" என்று இரைந்தாள் வீட்டுக்கார அம்மாள் பெரிதாக.

வீட்டுத் தலைவர் ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு வந்தார் கரிச்சான்களை விரட்ட.

"பாடறது நம்ம பெருமையைப் பத்தி. ஆனா, அதை நாம கேட்கக்கூடாதாம்! என்ன நியாயம்?" என்று 'கிசுகிசு'வென்று இரைச்சலிட்டது ஆண் கரிச்சான்.

"நாம்தான் ஆண்டாள் பாடியிருக்கும் ஆனைச்சாத்தன்னு அந்த அம்மாவுக்கு எப்படித் தெரியும்? யார்தான் கரிச்சான்னு பேர் வைச்சாங்களோ?" என்றது குஞ்சுகளில் ஒன்று.

"நாம கத்தறது சில சமயங்களில் மனிதர்களை வைவது போல இருக்கிறதாம்! இனிமை இல்லாத குரலில் கரித்துக் கத்துவதால் நமக்குக் கரிச்சான்னு பெயர் வைச்சுட்டாங்க. வலியன், கரிக்குருவி, இரட்டை வால்குருவி, கரிவெட்டுவாலின்னு நமக்குப் பல பெயர் இருக்கு. ஆனால் நிலைச்சது கரிச்சான்தான்" என்றது பெண் குருவி.

ஆண்டாள் பாடிய பெருமைக்குரிய ஆனைச்சாத்தனைத்தான் விரட்டுகிறோம் என்பதை அறியாமல் வீட்டுக்காரர் குச்சியை வீசிக் குருவிகளை விரட்டினார். நான்கு குருவிகளும் "கிசுமுசு கிசுமுசு" என்று வீட்டுக்காரரைத் திட்டுவது போல் குரல்

எழுப்பி வெளியே வந்தன.

**வே**ல மரத்தில் மாம்பழக் குருவிக் குஞ்சுகளின் ஓலம் நெஞ்சைப் பிளந்தது. வேல மரத்தில் ஏறிய ஒரு பெரிய ஓணான், மாம்பழக் குருவிகளின் கூட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

“கிஜூ கிஜூ கிஜூ கிஜூ!”

“க்கல் க்கல் க்கல்!”

“ட்வி... ட்வி... ட்வி...!”

“க்கு... க்கு... குகூகூகூ...”

நான்கு கரிச்சான்களும் விதம்விதமாக சப்தம் எழுப்பி ஓணானை மாற்றி மாற்றிக் கொத்தின. ஓணான் தலையைத் திருப்பி, குருவிகளைக் கௌவ எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை. சரமாரியாக மின்னல் வேகத்தில் கரிச்சான்கள் கொத்தின. அதோடு அவை போட்ட இரைச்சலால் அந்த மரமே இடுகிடுத்தது! தன் உயிரைக் காத்துக் கொண்டால் போதும் என்ற நிலை ஓணானுக்கு. பின்வாங்கி இறங்கி ஓடி மறைந்தது ஓணான்.

‘‘எங்கள் நன்றியை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை!’’ என்று தலை தாழ்த்தின மாம்பழக் குருவிகள்.

‘‘எருமையார் புரண்டு படுக்கிறார். மண்ணில் உள்ள பூச்சிகள் எல்லாம் நகரும். நல்ல இரை கிடைக்கும்’’ என்றது பெண் கரிச்சான்.

நான்கும் மாட்டுக் கொட்டிலை நோக்கி



விரைந்தன. புகழுரையைக் கேட்கக் கூட அவைகளுக்கு நேரமில்லை.

## அறிவியல் உண்மைகள்

❁ வலியன், கரிக்குருவி, இரட்டைவால் குருவி, கவண்வால் குருவி, கொத்தவால் குருவி என்று பல பெயர்களால் அழைக்கப் படும் DRONGOS என்ற கரிச்சானின் விலங்கியல் பெயர் DICRURUS ADSIMILIS MACROCERCUS (VIEILLOTA). ஆண்டாள் தனது பாசுரத்தில் குறிப்பிட்டுள்ள ஆனைச் சாத்தம், இக் குருவியே.

❁ அதிகாலையில் முதன் முதலாகக் குரல் தரும் பறவை இதுவே. பிறகுதான் காகம், குருவி, கோழி மற்றவை. இவை விதம்விதமாகக் குரல் தரும். திட்டி, அழுவது போலக் கூட இவை கத்தும்.

❁ கரிச்சான் பறவைகள் நெஞ்சுத் துணிவு மிக்கவை. பயமே இல்லாமல் வாழும். பருந்து, கருடன், கீரி, பாம்புகளைக் கூட அஞ்சாமல் எதிர்த்து வெற்றிகாணும். அந்த அளவுக்கு மூர்க்கத்தனமும், மின்னல் வேகத் தாக்குதலும் இருக்கும். இதன் காரண மாகவே பயந்த குணமுடைய பறவைகள் இவை வாழும் மரங்களில் கூடுகட்டி வசிக்கின்றன.

❁ முக்கிய உணவு புழு பூச்சிகள். பயிர் களுக்குக் கேடு இழைக்கக்கூடிய பூச்சி களையெல்லாம் இவை பிடித்துத் தின்று விடுவதால், விவசாயிகள் இதை விரும்பு கிறார்கள்.

❁ தந்திக் கம்பம், தாழ்ந்த மரக்கிளைகள், கிணற்றுப் பொந்துகள், ரயில் பாதை இடுக்குகள், பாலத்தின் அடிப்பக்கம், கோபுர கீழ்வங்குகள் என்று எங்கு வேண்டுமானா லும் இவை கூடுகட்டும். ஆண் பெண் இரண் டும் அடைகாத்து குஞ்சுகளைப் பேணும்.

❁ சுறுசுறுப்புக்கும், அண்டி வாழும் மற்ற பறவைகளுக்கு பாதுகாப்பாகவும் விளங்கும். இவைகளின் 'அடைக்கலப்' பெருமையைப் பற்றி இந்தியாவின் வடமாநிலங்களில் பாடல்கள் ஏராளம்.

---

## ஈற்று வாக்கியக் கதைப் போட்டி முடிவு

இந்தப் போட்டி கடினமாக இருந்ததோ என்னவோ, தெரிய வில்லை! மிக அதிக எண்ணிக்கை யிலான வாசகர்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. நாடோடிக் கதைகள், தெனாலிராமன் கதைகளைக் கூடத் திறமையாக மாற்றியிருந்தார்கள். ஆனால் கலந்து கொண்டவர் களெல்லாம் போட்டியை நன்கு புரிந்து கொண்டு கதையை எழுதி அனுப்பியுள்ளனர். இருப்பினும் பெரும்பாலானவர்கள் கதை, தங்கள் சொந்தக் கற்பனையே என்பதற்கான உறுதிமொழியைப் பெற்றோர் அல்லது ஆசிரியரிடம் வாங்கி அனுப்பவில்லை. பரிசுக்குரியவற்றை முடிவு செய்வது கடினமாகவே இருந்தது!

ரூபாய் இருபத்தைந்து பரிசு பெறுவோர் :

1. து. கிருஷ்ணராஜ், குறிஞ்சி நகர், கடலூர் -1.
2. கே. தீபா, அயன்புரம், சென்னை-23
3. இ. முகம்மது ஹாரூன்பாஷா, வத்தலகுண்டு
4. மூ. சுகந்தி, தூத்துக்குடி.
5. ப. செண்பகமுருகன், சின்னாளப்பட்டி - 1

பரிசு பெற்ற கதைகள் அடுத்த இதழில் வெளிவரும். பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

# புத்திசாலி

பொன்னுசாமி ஒரு விவசாயி. அவர் படிக்காதவராக இருந்தாலும் புத்திசாலி. அவருக்கென்று சிறிது நிலம் இருந்தது.தன் அறிவால் அவர் காலத்திற்கு ஏற்ற பயிர் செய்து வறுமையின்றி வாழ்ந்து வந்தார். மனைவியும் செந்தில், கல்யாணம் என்ற இருமகன்களையும் கொண்டது அவரது குடும்பம்.

காலம் உருண்டோடியது. மகன்கள் வளர்ந்து வாலிபர்களானார்கள்.



ஒருநாள் இருவரும் பொன்னுசாமியிடம் வந்து "அப்பா உங்களுக்கோ வயதாகிவிட்டது. நாங்களும் பெரியவர்களாகி விட்டோம். எனவே நாங்கள் இருவரும் சேர்ந்து பக்கத்து பட்டினத்தில் ஒரு கடை வைக்க உதவுங்கள்" என்றார்கள்.

பொன்னுசாமியும் யோசித்துவிட்டு "நீங்கள் சொல்வது சரிதான். - ஆனால் இருவரும் சேர்ந்து வைக்க வேண்டாம்' தனித்தனியாக வையுங்கள்" என்று கூறி விட்டு அண்ணன் செந்திலுக்கு தேனீர் கடையும், தம்பி கல்யாணத்திற்கு குளிர்பானக் கடையும் வைத்துக் கொடுத்தார்.


அது குளிர்காலமாதலால் அண்ணன் செந்தில் கடையில் வியாபாரம் சுறுசுறுப்பாய் நடந்தது. தம்பி கல்யாணத்தின் கடையில் வியாபாரமே இல்லை. இதைக் கண்ட தம்பி, அப்பாவிடம் வந்து "அப்பா... என் கடையில் வியாபாரமே இல்லை. எனக்கும் தேனீர் கடையே வைத்துக் கொடுங்கள்" என்று கேட்க - அப்பா சிரித்தபடியே... "அவசரப்படாதே... கொஞ்சம் பொறு" என்று கூறி அனுப்பினார்.

குளிர்காலம் போய் கோடை காலம் வந்தது. சூரியன் மக்களை சுட்டெரித்தான். ரோடுகளில் மக்கள் நடக்கவே பயந்தார்கள். தாகம் மக்களை வாட்ட மெல்ல தம்பி கல்யாணத்தின் குளிர்பானக் கடையில் வியாபாரம் பெருக ஆரம்பித்தது.

அப்போதுதான், காலத்திற்கு ஏற்றார்போல் கடை வைத்துக் கொடுத்த தன் தந்தையின் புத்திசாலித்தனம் புரிந்து மகன்கள் அவரை மனதாரப் பாராட்டினார்கள்.

— இரா. அ. தென்றல்

# எங்கள் பள்ளி



முயன்று பார்த்தால்
முடியும் உங்களால்!

நிரப்பத் தெரிந்தால்
நிச்சயம் கவிஞரே!

எங்கள் நல்ல பள்ளியை
எல்லா ருக்கும் பிடிக்குமே.
'இப்படி ஓர் பள்ளியா?'
என்று................ வியக்குமே!

எந்தப் பாடம் என்றாலும்
எளிதில் நாங்கள் கற்றிட
எல்லா வகைப் பயிற்சியும்
................ பள்ளி கொடுக்குமே!

உழைப்பி னோடு கல்வியும்,
உண்மை யான ஒழுக்கமும்,
உயிரை விட மேல் எனும்
உணர்வைப் பள்ளி................

கலைகள் என்னும் பெயரிலே
களைகள் சேர்ந்தி டாமலே
என்றும் எங்கள் மனங்களை
................ பள்ளி காக்குமே!


இனம், மொழி, மதங்களால்
எந்த வகை விரிசலும்,
................ நேர்ந்தி டாமலே
இதயப் பண்பைக் கூட்டுமே!

எல்லாக் குண ................
என்றும் எம்முள் நிலைத்திட,
எல்லா வகைப் பயிற்சியும்
எங்கள் பள்ளி வழங்குமே!

- ரா. பொன்ராசன்

கவிஞர் ஆகக்
கை கொடுக்கும் சொற்கள்

எங்கள், இனிய, நாடே
எம்முன், நலன்கள், ஊட்டுமே!



## வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் முதல் கதை



# என்ன காரணம்?

நா. சிவசுந்தர்

உங்களுக்குத் தலையார்குளம் கிராமத்தைத் தெரியுமா? அது, திருச்சிராப்பள்ளியிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. செழிப்பான ஊர். அவ்வூரில் உள்ள ஏழைக் கொத்தனார் கணேசனின் ஒரே பையன்தான் கார்த்திக். கார்த்திக் பிடிவாதக்காரன். தான் செய்வதுதான்; சொல்வதுதான் எப்போதும் சரி என்று வாதிப்பான். அவை தப்பாக இருக்குமோ என்று எண்ணிக் கூடப் பார்க்க மாட்டான். முரட்டுப் பிடிவாதக்காரன்.

படிப்பில் படு சோம்பேறி. பள்ளி ஆசிரியர் நடத்தும் பாடங்களை வீட்டுக்கு வந்து படித்தால்தானே மனதில் பதியும்? இப்ப என்ன அவசரம்? தேர்வுக்கு முன்னால் படிச்சால் போச்சு என்று காலத்தைக் கடத்துவான். அந்த நேரம் பார்த்து படிக்க முடியாமல் போகும். அப்பா அடிப்பார். காய்ச்சல் வரும். அப்பா, டாக்டர் மருந்து வாங்கிக் கொடுத்து, தேர்வு மண்டபத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்விட்டு, அவனைக் கூட்டிக் கொண்டு வருவார்.

ஒவ்வொரு ஆண்டும் இதே கதைதான். தேர்வு நேரத்தில் படித்தால் போதும் என்ற எண்ணத்தை யாராலும் மாற்ற முடியவில்லை. ஆசிரியர் கண்டித்து தண்டனை தந்தார். அம்மா கண்டித்துப் பார்த்தாள். அப்பா உதைத்துப் பார்த்தார். கார்த்திக் மசிய வில்லை எட்டாம் வகுப்பில் அவன் தேறியதே பெரிய புண்ணியம். ஒன்பதாம் வகுப்பிலும் கூட இதே கதைதான்!

முழு ஆண்டுத் தேர்வுக்கு, இன்னும் அறுபது நாட்களே இருந்தன. ஆனாலும் கார்த்திக்கு அதைப் பற்றிய நினைவே துளி கூட இல்லை. படிக்க வேண்டும், தேர்வில் பாஸ் பண்ணுவதற்குத் தேவையான குறைந்த அளவு மதிப்பெண்களையாவது வாங்க வேண்டும்; அதற்குத் தேவையான அளவாவது படிக்க வேண்டும் என்பதை அவன் எண்ணவே இல்லை. அவன் அம்மாதான் பாவம்

புலம்பிக் கொண்டே இருந்தாள்.

அப்பாவின் பொறுமை அளவுக்கு மீறியது. வேலைக்குக் கூடப் போகாமல் அவன் அருகிலேயே உட்கார்ந்து கொண்டு, பிரம்பையும் கையில் வைத்துக் கொண்டார். அதற்கு அப்புறம்தான் கார்த்திக் புத்தகங்களைப் புரட்டத் தொடங்கினான். படிக்க வேண்டிய பாடங்களின் அளவு அவனை மலைக்க வைத்தது. படபடப்பு அவனை ஆட்கொண்டது. வழக்கப்படி காய்ச்சல், டாக்டர் வீடு எல்லாம் தொடர்ந்தன. தேர்வு நெருங்கிவிட்டது கார்த்திக்கின் முகம் சோகத்தால் சூழப்பட்டது. ஒவ்வொரு பரீட்சையின் வினாத்தாளும் அவன் கைக்கு வந்தபோது அவனுக்கு அவை புதுமையாகவே தோன்றின! ''படித்திருந்தால் பாடங்களின் வினாக்கள் விளங்கும். கடைசி நேரத்தில் படித்தால் நடப்பது இது தான்'' என்பதை அவன் மனம் இடித்துக் காட்டத் தொடங்கியது. அதுவரை அந்தக் குற்ற உணர்வுகூட அவனுக்கு ஏற்படவில்லை.

பரீட்சைகள் முடிந்தன. கார்த்திக்கின் முகத்தில் சோகம் களைகட்டிவிட்டது. ஒன்றரை மாத விடுமுறை ஒரு நொடியில் கழிந்தது. தேர்வு முடிவுகள் நாளை வெளியிடப்படும் பயம் அவனைப் பற்றிக் கொண்டது. காலையில் எழுந்ததும் பல் துலக்கிவிட்டு, உடனே பள்ளிக்கு விரைந்தான். தேர்ச்சி பற்றிய சிந்தனை அவனைக் கலக்கியது. என்னவாகுமோ என்று உள்ளம் தடுமாறியது. பள்ளியை நெருங்க, நெருங்க மனதில் பயம் அதிகரித்தது. பள்ளி வந்து விட்டது. பள்ளி வளாக வெளியில் பெயர் எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. பலகை தெரியாத அளவிற்கு மாணவர் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. அவனும் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு நுழைந்தான். தன் பெயரைத் தேடினான். அவன் பெயர் தேர்ச்சி பெற்றவர் பட்டியலில் இல்லை!



அவன் நண்பர்கள் அனைவருமே தேர்ச்சி பெற்றிருப்பது தெரிய வந்தது. மீண்டும் ஒரு முறை தன் பெயரைத் தேடி ஏமாற்றத்தை உறுதி செய்து கொண்டான்.



அப்பாவின் பிரம்பு பிடித்த ஓங்கிய கையும், அம்மாவின் திட்டும் அவன் கண்முன் நிழலாடின. அரண்டவனாகப் பள்ளியைவிட்டு வெளியேறினான். கால்கள் துவண்டன. அவனால் நடக்க முடியவில்லை. துக்கம் மனதைச் சுமையாக்கி அவனைச் செயலிழக்கச் செய்தது. வழியில் இருந்த ஒரு வீட்டுத் திண்ணையிலமர்ந்து யோசனையில் ஆழ்ந்தான்.

"இந்த முறை மட்டும் நீ பாஸாகலே, உன் முதுகுத் தோலை உரித்து உப்புக் கண்டம் போட்டுருவேன்'' என்று தேர்வுக்கு இரண்டு மாதம் முன்பு அப்பா கண்டிப்பாகக் கூறியது அவன் மனக் கண் முன் நிழலாடியது. அதை நினைத்த மாத்திரத்திலேயே அவன் கண்களில் நீர் தளும்பியது. எந்த முகத்துடன் பெயிலான செய்தியை அப்பாவிடம் சொல்வேன் என்று அவன் பயந்தான்.

அவன் அப்பா கணேசன் கண்டிப்பானவர். கொத்தனாராக, நிலையான வருமானம் கிடைக்காத ஏழையாக இருந்தும், கார்த்திக்கு அவர் எந்தக் குறையும் வைக்கவில்லை. படிக்கவில்லையேல் வாழ்வு இல்லை என்பதை அவர் தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்தவர். அவனாவது படிக்க வேண்டும் என்பதில் அவர் குறியாக இருந்தார். அதனால் தான் அந்த எச்சரிக்கையை அவர் விடுத்திருந்தார். அதை எண்ணித்தான் கார்த்திக் பயந்தான். அவன் பெயிலானதை அவர் ஒரு நாளும் மன்னிக்க மாட்டார்.

இனி அவன் செய்ய வேண்டியது என்ன? அம்மாவும் அவனை மன்னிக்க மாட்டாள்.

நண்பர்கள் மூலம் செய்தி வீட்டை எட்டுமுன் அவன் ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்யலாம்? வீட்டுக்குப் போய் ஏதாவது பணத்தை வாங்கிக் கொண்டு உடனே கிளம்பி விட வேண்டும். சென்னைக்கு ரயிலேறிவிட வேண்டும். அங்கே போனால் கூலி வேலை செய்து கூடப் பிழைத்துக் கொள்ளலாம். அம்மாவிடம் திட்டும் வசவும், அப்பாவிடம் அடியும் வாங்குவதைவிட சென்னையில் கூலி வாழ்க்கை எத்தனையோ மேலானது. இருந்தாலும் இந்த முடிவுக்கு அவன் மனம் முழுச் சம்மதம் அளிக்கவில்லை. வசதியாக வளர்த்த தந்தையையும், அன்புத் தாயையும் விட்டு விட்டு ஓடுவதா என்று எண்ணினான். ஆனாலும், அவன் மனம் சென்னை செல்லும் முடிவைக் கைவிடவில்லை.

நேராக வீட்டிற்கு வந்த கார்த்திக் "அம்மா! நான் பாஸ். அடுத்த வருடத்திற்கு நோட்டுப் புத்தகம் பள்ளியிலேயே தர்றாங்க. அதுக்கு நூறுரூபாய் கேட்டாங்க. அப்பாகூட உங்கிட்டத் தந்து வைச்சிருக்கிறதா சொன்னார்" என்றான்.

அவன் தாய்க்கு அளவில்லாத மகிழ்ச்சி. மகிழ்ச்சி மிகுதியால் அவள் நூற்று ஐந்து ரூபாயாகவே கொடுத்தாள்.

கார்த்திக் "நூறுரூபாய் போதும்மா" என்றான்.

"நீ பாஸானதற்கு ஏழைப் பெற்றோரின் அன்புப் பரிசு அந்த ஐந்து ரூபாய்" என்று அன்பொழுக அம்மா பதிலளித்தாள்.

"சரிம்மா. போயிட்டு வாரேன்" என்று கூறிவிட்டு கிளம்பினான். நண்பர்கள் ஒருவரும் வந்து விடக் கூடாதே என்ற துடிப்பு இருந்தது.

"இருடா கண்ணு" என்று அம்மா அவனைத் தடுத்தபோது அவன் தடுமாறிப் போனான். ஒருவேளை முன்னமேயே அம்மாவுக்கு அவன் 'குட்டு' வெளிப்பட்டிருக்குமோ என்ற பயம் அவனைக் கௌவிக் கொண்டது.

"காலையிலேருந்து ஒன்றும் சாப்பிடலையே கண்ணா. காப்பியையாவது குடிச்சுட்டு பணம் கட்டப் போடா ராஜா" என்றாள் அம்மா. அவள் குரலில் பாசமும் பெருமிதமும் நிறைந்திருந்தது. அவன் மனம் மறுபடி சலனமடைந்தது. ஆனாலும், அந்த எண்ணத்தை வளரவிட இடமளிக்காது. அம்மா தந்த அந்தக் கடைசி காப்பியைக் குடித்துவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பினான். தெரு முனைக்குப் போனதும் திரும்பி இறுதியாக ஒரு முறை தனது வீட்டைப் பார்த்துக் கொண்டான். துக்கம் தொண்டையை அடைத்தது.

**ப**ஸ்ஸைப் பிடித்து ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தான். டிக்கெட்வாங்கிக் கொண்டு சென்னை ரயிலைப் பிடித்தான். ரயில் கிளம்பியது. என்னவோ தெரியவில்லை. ரயிலில் அதிகமாகக் கூட்டம் இல்லை. இரண்டரை மணி நேரம் கடந்திருக்கும். கார்த்திக்கின் அருகில் இருவர் வந்தமர்ந்தனர்.

"தம்பி! உம்பேர் என்னப்பா?"

"கார்த்திக்."

"எந்த ஊர்?"

"திருச்சிக்கு பக்கத்துல தலையர்குளம் அண்ணே."

"என்ன படிக்கறே?"

"ஒன்பது முடிச்சுட் டேன்."

"தனியாவா வந்தே?"

இந்தக் கேள்வி கார்த்திக்கை அஞ்சவைத்தது. ஆனாலும் துணிவு பெற்றவனாய் "ஆமாம்" என்றான். அவர்கள் அதோடு விடவில்லை.

"எதுக்கு சென் னைக்குப் போறே?" அதற்கு மேல் அவனும் காரணத்தை மறைக்கவில்லை.

"அப்போ நாங்களே உனக்கு வேலை தருகிறோம். எங்களோட வரயா?" என்று இருவரில் ஒருவன் கேட்டான்.


கார்த்திக் யோசித்தான். அவனுக்கு வேண்டியது வேலை. அதை இவர்களே கொடுப்பதானால் அதை ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?

அவன் சம்மதம் தெரிவித்தான்.

**வ**ண்டி சென்னை சென்றது. மூவரும் ஒரு ஆட்டோவைப் பிடித்து, கார்த்தியுடன் விரைந்தனர்.

ஆட்டோ சென்னை நகரை விட்டு, ஒதுக்குப்புறமான ஒரு பெரிய பாழடைந்த பங்களா முன் நிற்க, இறங்கினர். அந்தப் பகுதியின் தோற்றமே, பார்த்ததும் ஒரு வித அச்சத்தையும், திகிலையும் ஏற்படுத்தியது.

"நான் எங்கு வேலை பார்க்க வேண்டும்?" என்று மீண்டும் அப்பாவித்தனமாகக் கேட்டான் கார்த்திக்.



பரீட்சை நேரத்தில் எழுதாமல் ஏண்டா நீ காசை எண்ணி பார்க்கிறே?

காந்தி பிறந்த, இறந்த ஆண்டுகள் கேட்டிருக்கே? எந்த காசுல காந்தி படம் இருக்குதுன்னு பார்க்கிறேன் சார்!"

— எம்.டி. பார்த்திபன்



"உள்ளே வா! விவ ரமா சொல்றேன்" என்று அவர்கள் அவனை வீட்டிற்குள் கூட்டிச் சென்றனர். உள்ளே சென்றவுடன் கதவைத் தாளிட்டு உட்பக்கம் பூட்டினர்.

"பெற்றோர் கஷ்டம் தெரிஞ்சு படிக்காம ஊரைச் சுத்திவிட்டு பரிட்சையிலே கோட் டடிச்சிட்டு ஊரைவிட்டு ஓடி வந்திருக்கும் ஊதாரிப்பய நீ. உனக்கு என்ன கவர்னர் வேலையா தருவாங்க?" என்று ஏக வசனத்தில் மரியாதை இல்லாமல் பேசினான் ஒரு முரடன்.

"உன் ரெண்டு கண்களையும் ஒரு கையை யும் ஆபரேஷன் பண்ணி எடுத்திடுவோம். அப் புறம் நீ பிச்சை எடுக்கணும். எங்கே பிச்சை எடுக்கணுங்கறதை நாங்க முடிவு பண்ணு வோம். தப்பிச்சுக்கிட்டுப் போகலாம்னு நினைக்காதே. எங்க ஆளுங்க உன்னை கண்காணிச்சுக்கிட்டே இருப்பாங்க. என்ன மாவது முரண்டு பண்ணினே கொலையே பண்ணிடுவோம்" என்றான் இரண்டாவது முரடன்.

இந்தப் பரிதாப நிலை ஏற்பட என்ன கார ணம்? தனக்கு அன்பு காட்டி வளர்க்கப் பெற் றோர் இல்லையா? சக்திக்கு மீறி அவனைப் படிக்க அனுப்ப அவர்களுக்கு மனமில்லையா? அவர்கள் தனக்கு என்ன குறைவைத்தார்கள்? இருவரும் ஒருமேவனை பாடுபடல் கூட நந்தபள்ளா! தன் தேவையைக் கவனித்தனர்? அப்படிப் பட்ட அன்புள்ளம் கொண்ட பெற்றோர் மகிழ தான் என்ன செய்திருக்கிறோம்? படிக்காமல் காலங்கடத்தி ஊர் சுற்றிவிட்டு சோதாவாக அல்லவா வளர்ந் திருக்கிறோம்? அப்படிப் பட்ட அம்மா அப்பாவை மனம் நோக வைத்து, அவர்களை ஏமாற்றிய குற்றத்துக்கு தனக்கு இந்தத் தண்டை போதாது. இன்னும் கடுமையான தண்டனை தந்தாலும் தகும் என்று முதல் முறையாகத் தனது குற்றத்தை உணர்ந்து கண்ணீர் விட்டான் கார்த்திக்.

சிறிது நேரத்தில் மயக்க ஊசிபோட ஒருவர் வந்தார்., கார்த்திக்கால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை.

"அம்மா" என்று கத்திக் கொண்டே எழுந் தான்.


"கார்த்திக் கண்ணா? என்னடா ஆச்சு? ஏன் கூப்பிடறே? எழுந்திடு. காலைல இவ்வளவு நேரம் தூங்காதேன்னு எத்தனை முறை சொல்வது?" என்று அம்மா அவனை எழுப் பினாள்.

பல் துலக்கிய மறு நிமிடமே கார்த்திக் புத்தகங்களுடன் படிக்க அமர்ந்த காரணத்தை பெற்றோரால் அறிய முடியவில்லை!

வீட்டு வேலை பார்க்கும் ஏழை அம்மாவுக்கு முத்து ஒரே மகன். கைக் குழந்தையாக முத்து இருந்தபோது அவனது அப்பா விபத்தொன்றில் சிக்கி இறந்து விட்டார். அம்மா இடிந்து போய் மூலையில் முடங்கிடவில்லை. முத்துவை நன்றாகப் படிக்க வைத்து பெரிய மனிதனனாக ஆக்கவேண்டு மென்ற வேகத்தில், முன்னை விட அதிகமாக உழைத்து அவனைப் படிக்க வைத்தாள்.

தாயின் இலட்சியத்தை அறிந்த முத்து, படிப்பில் மிகவும் கெட்டிக் காரனாக விளங்க வேண்டுமென்ற ஆவலில் கஷ்டப் பட்டுப் படித்து, ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றான். இது அவனது தாய்க்கு மகிழ்ச்சியை அளித்தது.

# சிற்பி. சோமு



ரமேஷும், முத்துவின் வகுப்புத்தான். மிக நன்றாகப் படிப்பவன். ஆனால் வசதியான பெரிய செல்வந்தர் வீட்டுப் பையன். அந்தச் செருக்கு அவனுக்கு அளவுக்கு அதிகமாகவே இருந்தது.

முத்துவை அடிக்கடி வம்புக்கு இழுப்பான் ரமேஷ். "என்னைவிட உன்னால் எந்தப் பாடத்திலும் அதிக மதிப்பெண் வாங்க முடியாது; நான் கணக்குல புலி, ஆங்கிலத்தில் சிங்கம், தமிழிலே தலைவன்...!" என்று கொக்கரிப்பான்.

உண்மையில் முத்துவை விட ரமேஷ் முதல்வனாகத் திகழ்ந்ததற்குக் காரணம், அவனுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும், ஒரு டியூஷன் வாத்தியார்

வைத்துச் சொல்லிக் கொடுக்க அவனது பெற்றோர் ஏற்பாடு செய் திருந்தனர். அந்த வசதி வாய்ப்பு முத்து வுக்கு இல்லை.

முத்து வகுப்பில் படிப்பதோடு சரி. மற்றபடி அவன் சுயமுயற்சியில் வீட்டில் படிப்பதுதான். டியூஷன் வைத்துப் படிக்க வைக்கிற அளவுக்கு அவன் அம்மாவுக்கு வசதியில்லை.

தன் குடும்பச் சூழ்நிலையை நன்கு உணர்ந்திருந்த முத்து, தான் உண்டு; தன் படிப்புண்டு என்று எந்த நேரமும் படிப்பில் கவனம் செலுத்தி வந்தான்.

ஆனால்... ரமேஷ் அப்படியில்லை. முத்துவை அடிக்கடி வேண்டுமென்றே சீண்டி வம்புக்கிழுப்பான். எத்தனை முறைதான் முத்துவால் தாங்கிக் கொள்ள முடியும்? ஒருநாள் பொறுக்க முடியாமல் அம்மாவிடம், "ரமேஷின் கர்வமும் தலைக் கனமும் அளவுக்கு

# அம்மா சொன்ன கணக்கு!



மீறி அதிகரித்து விட்டது. தினம், தினம் தன் மானத்தைப் பாதிக்கும் படி; ஆத்திரம் உண்டாகும் வகையில் பேசி வம்புக்கு இழுக்கிறான்; ஏளனம் செய்கிறான். எவ்வளவுதான் ஒதுங்கிப் போனாலும் விடுவ தில்லை" என்று அழுதான்.

அம்மா யோசித்தாள். பணக்கார முத்துவை அவன் வழியிலேயே மடக்கினால்தான் மீண்டும் வம்புக்கு வர மாட்டான் என்று அவள் எண்ணினாள்.

முத்துவிடம் ஒரு கணக்கைக் கூறி, "நாளைக்கு பத்துப் பசங்

களுக்கு முன்னால் இந்தக் கணக்கை ரமேஷிடம் கூறி விடை கேள். அவன் தவறான விடைதான் சொல்வான். ஏனெனில் கர்வம் பிடித்தவர்களிடம் சிந்திக்கும் ஆற்றல் இருக்காது. பிறகு நீ விடையைக் கூறி அவன் தலைக் கனத்தைக் குறைத்து விடலாம்," என்று யோசனை சொன்னாள்.

முத்து, தாய் கூறிய கணக்கை கவனமாகப் பலமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

மறுநாள்.

வழக்கம் போலத் தன்னை நண்பர்களுக்கு நடுவில் வம்புக்கிழுத்த ரமேஷிடம், முத்து சவால் விட்டான்.

"நீ கணக் குல பெரிய புலி என்பது உண்மைன்னா, நான் போடும் கணக்குக்கு உன்னால் விடை சொல்ல முடியுமா?"

வந்ததே ரமேஷுக்குக் கோபம்! பத்து பேர் மத்தியில இப்படிக் கேட்டு விட்டானே என்ற கடுகடுப்புடன், "டேய் முத்து! ஒண்ணு என்ன...? ஒன்பது கணக்குச் சொல்! 'டாண்... டாண்'னு பதில் சொல்றேன்?" என்று ஆணவத்துடன் கூறினான்.

முத்து ஒரு நிபந்தனை போட்டான். "இந்தக் கணக்கில் தவறான விடையைக் கூறித் தோற்றுவிட்டால் இனி என்னை வம்புக்கிழுப்பதை விட்டு விட வேண்டும்... ஒப்புக் கொள்கிறாயா?"

ரமேஷ் நிபந்தனையை ஏற்றுக் கொள்ள, முத்து கணக்கைக் கூறினான்.

"ஒரு நூல் வியாபாரி இரண்டு மூட்டைப் பஞ்சை நூறு ரூபாய்க்கு வாங்கி வந்தான். பின்னர் அதை நூற்று ஐம்பது ரூபாய்க்கு விற்றான். வியாபாரி, அடைந்தது இலாபமா...? நஷ்டமா...? எத்தனை இலாபம்? எத்தனை நஷ்டம்?"


கணக்கைக் கேட்ட ரமேஷ், முத்துவைப் பார்த்து, "இந்த சுண்டைக்காய் கணக்குக்கா இத்தனை பீத்திக் கிட்டே!" என்று கேலியாகச் சிரித்தான். பிறகு, "பஞ்சு வியாபாரி அடைந்தது ஐம்பது ரூபாய் லாபம்தான்!" என்றான்.

"அதுதான் இல்லை! பஞ்சு வியாபாரி அடைந்தது ஐம்பது ரூபாய் நஷ்டம்!" என்றான் முத்து அமைதியாக.

"எப்படி....?" என்றான் ரமேஷ் குழப்பத்துடன்.

"வியாபாரி வாங்கியது நூறு ரூபாய்க்கு. அதுவும் பஞ்சு. அதையே அவன் நூலாக நூற்று, ஐம்பது ரூபாய்க்கு விற்று இருக்கிறான். வியாபாரி அடைந்தது ஐம்பது ரூபாய் நஷ்டம்தானே...?"

ரமேஷ் தலைகவிழ்ந்தான்! அன்றிலிருந்து அவன் முத்துவிடம் வம்புக்கு வருவதில்லை. யாருடனும் வம்பு பண்ணுவதில்லை.'



கணக்குல ஒரே ஒரு மார்க்குல 'பெயில் ஆனதுதான்டா வேதனையா இருக்கு"


"எவ்வளவு மார்க் வாங்கியிருந்தே...? 39ஆ?"

"இல்லேடா... வாங்கின மார்க்கே 1தான்!"

— சீர்காழி வி. ரேவதி

# அறிவியல் சாதனைகள்!


ஆழி



○ ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன், இத்தாலியன், ஸ்பானிஷ் ஆகிய 5 மொழிகளில் பேசக்கூடிய கருவி இது. இந்த 5 மொழிகளில் ஒன்றுமட்டும் தெரிந்தவர்கள், மற்ற 4 மொழிகளைப் பேச இது உதவும். தேவையான வாசகத்திற்குரிய பித்தானை அழுக்கினால், திரையில் அந்த வாசகம் தெரிவதோடு குரலும் கேட்கும்! ஒவ்வொரு மொழியும் அந்தந்த நாட்டவரின் உச்சரிப்பிலேயே இருக்கும். 4 சிறிய பாட்டரிகளில் இயங்கும். சட்டைப் பையிலேயே வைத்துக் கொள்ளலாம். இது அமெரிக்கத் தயாரிப்பு.




○ கடலில் எங்கே மீன்கள் கிடைக்கும் என்பதைக் காட்டும் கம்ப்யூட்டர் இது. 'ஸ்டாக்கர் சைட் ஃபைண்டர்' ஒலி அலைகளைக் கொண்டு, மீன்கள் இருக்கும் இடத்தைத் திரையில் காட்டி விடும். இதைக்கொண்டு யாராக இருந்தாலும் எளிதாக மீன் பிடித்து விடலாம்!






○ இந்த 'டார்ச்'சின் ஒளி 1½ கி.மீ. தூரத்திற்குச் செல்லும். 5 லட்சம் மெழுகு வர்த்தியின் ஒளி இதற்கு உண்டு. 12 வோல்ட் பாட்டரியில் இயங்குகிறது. காரின் முகப்பு விளக்கு போல் 10 மடங்கு ஒளி தரும். இது அமெரிக்கத் தயாரிப்பு.

○ ஒரு மண்டை ஓட்டை வைத்து, அது யாருடையது என்பதை இந்த கம்ப்யூட்டர் வரைந்து காட்டிவிடும். முகமூடி அணிந்த திருடனையும், சிதைந்த முகத்தையும், நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இறந்த மனிதனின் முகத்தையும் இது முழுமையாக உருவாக்கிக் காட்டிவிடும். லண்டன் கண்டுபிடிப்பு இது.



இது துப்பாக்கி அல்ல; காமிரா. துப்பாக்கிமாதிரி வடிவமைக்கப் பட்டது. இதைக் 'கிளிக்' செய்தால், படம் பதிவாகும். போர்முனையில் ஒற்றர்கள் பயன் படுத்துவார்கள். லண்டன் தயாரிப்பு.





○ உலகிலேயே மிகவும் சிறிய வீடியோ காமிரா இது. பெயர்: 'டைனிடிம்'. கட்டைவிரல் அளவு இருக்கும். எடின்பரோ பல்கலைக் கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் பயன்படுத்துகிறார்கள்.





○ வாய்பேச முடியாத ஊமைகளுக்காக ஹாங்காங்கில் கண்டுபிடிக்கப்பட்ட தொலை அச்சு இது. இதில் ஆங்கில எழுத்துக்கள் இருக்கின்றன. பேச வேண்டிய செய்தியை டைப்ரைட்டர் போல் தட்டவேண்டும். எதிர்முனையில் இருப்பவரும் இதுபோல் ஒரு கருவியை வைத்திருந்தால், இருவரும் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளலாம்.





○ இது புதுமையான டிஜிட்டல் தெர்மாமீட்டர். இதில் உள்ள சிறிய திரையின் மூலம் உடலின் வெப்பநிலையைத் துல்லியமாகக் காட்டிவிடும். பம்பாய் ஆனந்த் ஹெல்த் நிறுவனத்தின் கண்டுபிடிப்பு இது. விலை சுமார் ரூ.250

○ எரிந்துகொண்டிருக்கும் எரிமலையின் உள்ளே இறங்கி, அதைச் சோதித்துத் தகவல் தரும் இயந்திரம் இது. எட்டுக்கால் பூச்சி போன்று 8 கால்கள் இதற்கு உண்டு. அமெரிக்க விண்வெளித்துறையினர் இதை உருவாக்கியிருக்கிறார்கள்.







○ உண்மைதான்! இது காகிதத்தாலேயே உருவாக்கப்பட்ட சைக்கிள். ஜப்பானில் 'மல்பெரி' மரத்தின் பட்டையில் தயாரிக்கப்படும் 'வாஷி' பேப்பரை வெப்பத்தால் நன்கு இறுகச் செய்து இதன் பாகங்களைத் தயாரிக்கிறார்கள். இலேசாக இருக்கும். நீண்ட நாட்கள் உழைக்கும். உடைந்துவிட்டால் மீண்டும் காகிதமாக்கி, மீண்டும் சைக்கிளாக உருவாக்கிவிடலாம்! 2




○ மணிக்கு 334 கி.மீ. வேகத்தில் இந்தச் சைக்கிளை மிதித்துக் கொண்டு போகலாம்! இதற்குமேல் வேகமாக வேறு எந்த சைக்கிளிலும் போக முடியாது! இதன் மொத்த எடை 5 கிலோதான்! கரிம இழைகளைக் கெட்டிப்படுத்தி இதன் பாகங்களைத் தயாரித்திருக்கிறார்கள். சக்கரத்தின் அச்சு, பல்சக்கரம் மட்டும் உலோகம். இதை டிசைன் செய்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த புருஸ்.




○ இந்தச் சைக்கிள், கடல் மணல், ஐஸ் தரை, கரடுமுரடான சாலை— எல்லாவற்றிலும் இலகுவாக ஓடக்கூடிய சக்கரங்களைக் கொண்டது. அமெரிக்கத் தயாரிப்பு.




○ சூரிய சக்தியால் இயங்கும் ஜெட் படகு இது. 'சன் ஃபன்' என்னும் பெயருடைய இந்தப் படகு 'ஹோண்டா' மோட்டார் கம்பெனியின் தயாரிப்பு. இதன் வேகம் மணிக்கு 10 கி.மீ. தான்!

○ இதோ, இந்த வாகனத்திற்கு இரண்டு எஞ்சின்கள். சக்கரங்கள் இல்லை; ஆனால், சக்கர வடிவிலேயே இருக்கிறது, கார். சக்கரத்துக்குள் இருக்கும் இருக்கை, கார் ஓடும்போது உருளாது. இருந்த இடத்திலேயே இருக்கும். ஸ்டியரிங் உதவியால் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் திருப்பி ஓட்டலாம். இந்த வாகனம், இங்கிலாந்தில், புருக்லேண்டு மியூசியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.





3



○ இந்த வாகனத்திற்குச் சக்கரங்கள் இல்லை; மோட்டார்கள் இல்லை. ஓட்டுநர் கூட இல்லை! இது குறிப்பிட்ட தூரம் சென்றதும் தானாகவே நிற்கும். பிறகு குறிப்பிட்ட நேரத்தில் தானாகவே புறப்படும். முற்றிலும் காந்த சக்தியால் இயங்கும் இந்த வாகனம் ஜெர்மனி விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சூம் என்னும் பெயருடைய இந்தக்கார், மின்சாரத்தால் இயங்கக் கூடியது. இதன் சிறப்பு அம்சம், சக்கரங்களை மடக்குவதன் மூலம், இதன் நீளத்தை அதிகப் படுத்தலாம்; அல்லது உயரத்தை அதிகப்படுத்தலாம். எந்த நிலையிலும் இதை ஓட்ட முடியும். அமெரிக்கத் தயாரிப்பு.





○ உலகில் மிகப்பெரிய டிராக்டர் இது. அகலத்தில், இரண்டு பக்க சக்கரங்களுக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 10 மீட்டர். டிராக்டரின் நீளம் சுமார் 4 மீட்டர். இதனால் ஒரேதடவையில் அதிக நிலப்பரப்பை உழ முடியும். இதுவும் அமெரிக்கத் தயாரிப்புதான்!



○ இது நீரின் மீது ஓடும் ஸ்கூட்டர்! இதில் இரண்டுபேர்கள் பயணம் செய்யலாம். விலை சுமார் 2000 டாலர். ஆஸ்திரேலிய நாட்டின் கண்டுபிடிப்பு.



○ கார், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் ஏற்படும் பஞ்சரைத் தானே சரிசெய்து கொள்ளும் திரவம் அகமதாபாதில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வாகனங்களின் டியூப்களின் உள்ளே இந்தத் திரவத்தை ஒரு முறை செலுத்தி, காற்று அடைத்து விட்டால் போதும்; பஞ்சராகும்போது, இத் திரவம் தானாகவே அந்த இடத்தை அடைத்துவிடும்.

4

# ஆணவம் அழிந்தது!



காட்டில் வனவிழா மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. விழாத் தலைவர் யானையார் உற்சாகமாக இருந்தார். விழாவில் விலங்குகள் மட்டுமல்லாமல் பறவைகளும் கலந்து கொண்டன. விருந்தும் வேடிக்கையும் ஆடலும் பாடலும் விளையாட்டும் கோலாகலமாக வெகு நேரம் விழா நடந்தது. விழாவின் கடைசிக் கட்டத்தில் தலைவர், யானையார் கூடியிருந்தவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"விழா முடிவடையும் நிலையில் இருக்கிறது. விழாவுக்கு வந்திருப்பவர்களில் இனத்துக்கொருவராக மேடைக்கு வந்து ஒரு பாட்டுப் பாட வேண்டும். பாடத் தெரியாது என்று எந்த இனத்தாரும் சொல்லக் கூடாது. பாட்டை முழுமையாகப் பாட வேண்டுமென்பதில்லை. முதலடியைப் பாடி. ராகம் இழுத்தாலே கூடப் போதுமானது. யாரும் கேலி பண்ண மாட்டோம். கழுதையின் குரலாயிருந்தாலும், அது கல்கண்டுக் குரலாகக் கருதப்பட்டு பாராட்டப்படும். எனவே, ஒவ்வொருவராக மேடைக்கு வந்து ஒரு நிமிடமாவது கட்டாயம் பாட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்து அழைத்தார்.

யானையாரின் அழைப்புக் கிணங்கி எல்லா இனத்துப் பிரதிநிதிகளும் வந்து மேடை ஏறிப் பாடினர். ஒவ்வொரு பாட்டுக்குமிடையேயும், முடிந்த பிறகும் கைதட்டல் பலமாக இருந்தது. ஆனால் குயில் வந்து பாடியதும் கரவொலி நீண்ட நேரம் நீடித்து காதைத் துளைத்தது. தொடர்ந்து சில நிமிடங்கள் கைதட்டல் சத்தம் ஒலித்தபடியே இருந்தது. "என்ன இனிமை! எத்தனை அற்புதமான இனிய குரல்!" என்று வியப்புக் கலந்த பாராட்டுகள் எழுந்தன. குயில் மீண்டும் பாட வேண்டுமென்ற "ஒன்ஸ் மோர்" கோரிக்கையும் பல திசைகளிலிருந்தும் கேட்டது.


தலைவர் யானையாரும் மகிழ்ச்சியோடு குயிலை மறுபடி பாட அனுமதித்தார்.

குயில் பெருமிதமடைந்தது. நெஞ்சை

**மு. துரைராசன்**

நிமிர்த்திச் சுற்றிலும் பெருமையாகப் பார்த்துக் கம்பீரமாக நின்றது. தன் இனிமை பொழியும் குரலைச் சரிப்படுத்திக் கொண்டு பாடியது. அங்கு கூடியிருந்த பறவைகளும் மிருகங்களும் தங்களை மறந்து குயிலோடு சேர்ந்து பாடின. அத்தனை இனிமையாக இருந்தது, குயிலின் பாட்டு.

யானையார் குயிலுக்கு மலர்க்கிரீடம் வைத்து "இசை மாமணி" என்ற பட்டத்தையும் அளித்தார்.



அன்றிலிருந்து குயிலுக்குத் தலைக் கனம் ஏறியது. மண்டைக் கர்வம் பிடித்தது. மற்ற பறவைகளையும் சிறிய விலங்குகளையும் அது துரும்பாகப் பார்த்து அலட்சியம் செய்தது. அவற்றைக் காண்பதும், அவற்றோடு பேசுவதும் கூட தனது நிலைக்குக் கீழானது என்று கூட அது எண்ணத் தொடங்கியது. பெரிய விலங்குகளைக் கூட வர வர மதிக்காது நடந்து கொள்ள ஆரம்பித்தது. நாளுக்கு நாள் அதன் ஆணவமும் திமிரும் அதிகரித்தது.

இதன் காரணமாக எல்லா மிருகங்களும் பறவைகளும் குயிலின் மீது பகை கொண்டன. அதன் கர்வத்தை ஒடுக்கத் துடித்தன. ஆங்காங்கே சிறு சிறு கூட்டம் கூடி, கூட்டம் போட்டுப் பேசின. இறுதியில் எல்லோரும் சேர்ந்து நடத்திய கூட்டத்தில் எப்படியாவது குயிலின் ஆணவத்தை அடக்க வேண்டும் என்று எல்லாம் வலியுறுத்தின. வயதானவை குயிலைத் தாங்களே தண்டிக்கும் எண்ணத்தை ஏற்க வில்லை. கடைசியில் "நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். கடவுளுக்கு எல்லாம் தெரியும். இருந்தாலும்

நடந்தவற்றைக் கடவுளிடம் ஒருமுறை விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவரே ஒரு நல்ல வழியைக் காட்டுவார்'' என்று முடிவு செய்தன.

அவ்வாறே கடவுளிடம் எல்லாப் பறவை, விலங்குகளும் சென்று முறையிட்டன. அவர் கவலையோடு குயிலினத்தைக் கூப்பிட்டு விசாரித்தார். விவரங்களை அறிந்து கொண்டார். குயிலினம் குற்றத்தை மறுக்கவும் முடியாமல் ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் தலைகுனிந்து நின்றது.

"எல்லோரும் முறையிட்டது உண்மைதான்! நீங்கள் ஆணவம் பிடித்து அட்டகாசம் செய்திருக்கிறீர்கள். உங்களை இப்படியே விட்டு விட்டால் உங்கள் ஆணவமும், செருக்கும் அடங்காது. ஏதாவது தண்டனை விதிக்க வேண்டியது அவசியம்'' என்று சற்று யோசித்தார் கடவுள்.

பிறகு, "இதோ பிடியுங்கள் சாபத்தை! இன்று முதல் பறவைகளுக்கே இயல்பான சுள்ளிகளாலும் சருகுகளாலும் கூடு கட்டும் அற்புதக் கலையை நீங்கள் அடியோடு மறந்து போவீர்கள். அதோடு உங்கள் இனத்திற்குத் தாய்ப் பாசம் இருக்கவே இருக்காது. மேலும் உங்களுக்கு முட்டையை அடைகாத்துக் குஞ்சு பொரித்து, குஞ்சுகளுக்கு இரை ஊட்டி வளர்க்கும் கலையும் மறந்து போகும்'' என்று சபித்தார்.


குயிலினம் மிகவும் வருந்தப்பட்டது. "ஆண்டவனே! எனக்குப் புத்தி வந்து விட்டது. மறுபடி இம்மாதிரி எதுவும் நடக்காது. இது மிகவும் கொடுமையான சாபம். இச் சாபத்தால் எங்களுக்குச் சந்ததியே இல்லாது போகும். எங்கள் இனமே அழிந்து போகும். நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளி எங்கள் இனம் அழிந்து போய் விடாது விருத்தியடைய ஒரு வழி சொல்ல வேண்டும்'' என்று மன்றாடியது பாடிய குயில்.

கடவுளும் குயிலினத் தின் வேண்டுகோளுக்கிணங்கித் தான் இட்ட சாபத்தைச் சீரமைத்தார். "நீங்கள் எப்போதும் போல் முட்டை யிடுவீர்கள். ஆனால் கூடு கட்டும் கலையை மறந்து விடுவீர்கள். ஆதலால் நீங்கள் ஏறத்தாழ உங்களைப் போலிருக்கும் காக்கையின் கூட்டில் திருட்டுத்தனமாக முட்டை இடுவீர்கள். காக்கை, தன் முட்டைகளுடன் உங்கள் முட்டையையும் சேர்த்து, அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்; குஞ்சுக்கு இரையும் ஊட்டும். ஆனால் குயில் குஞ்சு பெரிதாகிப் பறக்கும் நிலையை அடையும்போது காக்கை அக்



குஞ்சை அடையாளம் கண்டு துரத்தி விடும்'' என்று திருத்தினார்.

திருத்தத்தைக் கேட்டுக் குயில் இனம் ஓரளவு சமாதானம் அடைந்தாலும் முழு மகிழ்ச்சி அடையவில்லை. இழந்ததையெல்லாம் எண்ணி எண்ணி இன்னும் ஏங்குகின்றன! அந்த ஏக்கம் நினைவுக்கு வரும்போதெல்லாம் குயிலினம் வருந்துகிறது. துக்கம் பீறிட்டு "அக்...கூ, அக்...கூ'' என்று ஏக்க கீதம் பாடுகின்றன!



# வேலைக்காரிக்கும் நேர்முகத் தேர்வு!

அமெரிக்காவில் ஒரு கோடீஸ்வரி தன்னந்தனியாக வசித்து வந்தாள். அவளுடைய திருப்திக்கு யாருமே நல்ல வேலையாளாக வரவில்லை. இத்தனைக்கும் அவள் கணிசமானதொரு தொகையை சம்பளமாகக் கொடுக்கத் தயாராக இருந்தாள்.

அவளிடம் வேலை பார்த்த வேலைக்காரிகளெல்லாம் சொன்ன வேலையை மட்டுமே செய்தார்களே தவிர, தன் வீட்டில் செய்வதுபோல் எந்த வேலையையும் வலியச் செய்யவில்லை.

வீட்டு எஜமானி எங்காவது வேலையாக வெளியே சென்று விட்டாலோ வேலைக்காரர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். போட்டது போட்டபடி போட்டுவிட்டு, சும்மா வெட்டிப் பொழுது போக்குவார்கள். இந்த குணம் கோடீஸ்வரிக்குப் பிடிக்கவில்லை.

வேலையாளுக்கு நிறையச் சம்பளம் தருவதாக விளம்பரப்படுத்தி, நேர்முகத் தேர்வைத் தானே நடத்தி, நல்ல உண்மையான வேலையாளைக் கண்டு பிடிக்க எண்ணினாள்.

நிறையச் சம்பளம் என்பதால் ஒரே போட்டா போட்டி! நிறையப் பேர் மனுச் செய்திருந்தனர்.


அன்று காலை பத்து மணிக்கு நேர்முகத் தேர்வு.

அறைவாசலுக்கும் தன் சோபாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு துடைப்பத்தைப் போட்டு வைத்தாள் கோடீஸ்வரி. காரியதரிசி ஒவ்வொருவராக பெயர் வாசித்து உள்ளே அனுப்ப, ஒவ்வொருவரும் அந்தத் துடைப்பத்தைத் தாண்டிக் கொண்டும், மிதித்துக் கொண்டும், அதன் மேல் படாமலும் வந்து கேட்ட கேள்விகளுக்குத் திருப்தியான பதிலைச் சொல்லி விட்டுப் போனார்கள். கடைசியாக வந்தவள் நடுவில் கிடந்த துடைப்பத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போய்க் கதவு மறைவில் சாய்த்து வைத்து விட்டு வந்து நின்றாள் பணிவாக! கோடீஸ்வரி அவளிடம் எந்தக் கேள்வியுமே கேட்கவில்லை!

காரியதரிசியைக் கூப்பிட்டு அந்த கடைசியாக வந்தவளையே வேலைக்கு நியமிக்கும்படி உத்தரவிட்டு விட்டு உள்ளே சென்று விட்டாள்.


'வேலையாளுக்கு அழகு, சொல்லாமல் செய்வதுதான்' என்று கோடீஸ்வரி தீர்மானித்தபடி, கடைசிவரை நாணயமாக நடந்து நல்ல பெயர் எடுத்து முன்னேறினாள் கடைசியாக வந்த வேலைக்காரி.

— எஸ்.ஜி. பாத்திமா


பூனைக்கு வரிபோட்ட பூபதி!
கதை அமைப்பு : ரே
ஓவியம் : சசி
மங்களபுரி மன்னன் பூபதிக்கு மக்களிட்ட பெயர் கோமாளி!
தினமும் குளிக்கணுமா? இனி சாப்பிட்ட பிறகுதான் குளியல்!
இனி தயிர் சாதத்துக்கு ஊறுகாய் கிடையாது!
சரி அரசே!
பூபதிக்கு சகுனத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை
கழுதையைக் கத்த விட்டாச்சு. கிளம்புங்க அரசே!
பூனை எதுவும் குறுக்கே வராம பண்ணியாச்சு மன்னா...
இத்தனை பண்ணியும் ஒருநாள்—
பூனை குறுக்கே பாய்ந்தது!



பூனைக்கு உரியவரைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்
பூனைக்கு சொந்தக்காரர் இவர்தான்...!
மன்னியுங்கள் அரசே!
நான் போகையில் பூனைகளைப் பிடித்து வைக்க வேண்டும் என்பது தெரியாதா?
தெரியுங்க ஆனா பூனை, பிடிக்க முடியாம புகைக் கூண்டுல பதுங் கிட்டுதே!
காரணம் வேண்டாம். விதி மீறலுக்கு தண்டனை தெரியுமா?
தெரியும் அரசே. கருணை காட்டுங்கள். அந்தப் பூனை என்னுதே இல்லை. முன்பு குடியிருந்தவர்கள் வளர்த்தது.
அரசே இவர் கூறுவது நியாயம்தான். பூனை மனிதரைவிட வீட்டையே நேசிக்கும்.
இப்படியே எல்லோரும் தப்பிடுவாங்க. இதற்கு ஒரு வழி கண்டு பிடிக்கணும்.
அமைச்சரே.. நம் இராஜ்ஜியத்தில் பூனை வளர்க்க தடை போடுங்கள்.
அரசே...!



வேணுமானா வரி கட்டி வளர்க்கட்டும். அவங்க கூட சகுனத் தடை இல்லாம கவனிக்கணும். மீறினால் கடுந் தண்டனைன்னு அறிவியுங்க.
இது பெரும் குழப்பத்தை விளைவிக்கும்! வேண்டாம். இந்த உத்தரவு.
சொல்வதைச் செய் யுங்க. உத்தரவை உடனே செயல்படுத்துங்கள்...
பூனை வரி உத்தரவு உடனே அறிவிக்கப்பட்டது.
என்னது! பூனைக்கு வரியா!
பித்துக்குளி அரசா இருக்கே!
மக்கள் பூனைகளைப் பிடித்து போய் விட்டுவிட்டு வந்தனர்.
அடுத்த நாள்—
பூனை திரும்பி வந்துடுத்து!
ஆமாம்! குட்டிகளோட!


பூனை இருக்கே! வரிகட்டியாச்சா?
ஐயா, எங்க விட்டாலும் திரும்பி வந்திடுதே! என்ன செய்ய?
வரி கட்டுங்க. இல்லே சிறைக்கு வரீங்களா?
ஐயோ! கேட்பார் இல்லையா! இப்படி எங்கே யாவது உண்டா?
அரசவையில்–
வரிகட்டி எங்களால மாளல.
யார் வீட்டுப் பூனையோ எங்க வீட்டுல இருந்தாகூட, எங்களை வரிகட்டச் சொல்லி கட்டாயப் படுத்தறாங்க.
அரண்மனைப் பூனை என் வீட்டுக் கூரைல இருந்தது. அதுக்கு என்னை வரிகட்ட வைச்சாங்க!
நான் வளர்க்காத பூனைகளுக்கு என்னை ஆறுமுறை வரிகட்ட வைச் சாங்க. நாய், பசு, ஆடு மாதிரி பூனை யைக் கட்டிப்போட முடியாது. அவை எந்த வீட்டுக்கூரையிலும் ஏறுவதைத் தடுக்க முடியாது.
அப்ப பெரிய கூண்டு பண்ணி காட்டுல வைச்சு, எல்லாப் பூனைகளையும் அதில் புடிச்சு அடையுங்க!


அப்போ அவைகளுக்கு உணவு?
அரசு செலவில் பால், மீன், முட்டை போடுங்க!
பெரிய கூண்டு அமைத்து, பூனைகள் சிறைப்படுத்தப்பட்டன!
பூனைகளைக் காண முடியாது குழந்தைகள் தவித்தனர்.
பூனை வந்தால்தான்...
பூனைக்கு எங்கம்மா போவேன்? ராஜா கூண்டுல அடைச்சிட் டாரே!
என் பூனைதான் வேணும். பொம்மை வேண்டாம்.
எங்கேயாவது 'மியாவ்' சத்தம் கேட்கிறதா என்று காவலர்கள் அலைந்தனர்!


அங்கே மியாவ் சத்தம்! கைது பண்ணலாம்வா!
மியாவ்!
மியாவ்!
மியாவ்!
கதவைத் தட்டி—
பூனை இருக்கு. கைது பண்ணறோம்.
எங்கே? புடிச்சு அனுப்பணும்?
பாட்டி உள்ளே திரும்பி—
யாருடா பூனை? வாவா! கூண்டுல போடறாங்களாம்!
குழந்தைகள் ஓடி வந்தனர்!
நான்தான் மியாவ்!
நானும்!
நான் கூட!
அறிவுகெட்ட புண்ணாக்குகளே! பைத்தியக்கார ராஜா சொன்னான்னு எல்லாப் பூனைகளையும் காட்டுல விட்டுட்டீங் களே...!


விளையாட, அன்பு காட்ட, பாலூட்ட, சோறூட்ட பூனைங்க இல்லாம குழந்தைங்க எப்படித் தவிக்குது! உங்க வீட்டுல குழந்தைங்க இல்லே?
காவலர்கள் தலைகுனிய
ஏதோ பூனை மாதிரி கத்தியாவது விளையாடலாம்னு ஆடுதுங்க! இதைக் கூடவா உங்க ராஜா தடுப்பாரு...!
அரண்மனையில்—
மியாவ் மியாவ் பூனைக் குட்டி! மீசைக்காரப் பூனைக்குட்டி!
என்னது! உத்தரவை மீறி இரகசியமா இளவரசி பூனை வளர்க்கிறாளா?
ஜன்னல் வழியாகப் பார்த்து—



என்னம்மா! எனக்குப் புடிக்காத பூனையைப் புகழ்ந்து இப்படிப் பாடி ஆடறே!
அழகான பாட்டு. இது மாதிரி எத்தனை இருக்கு தெரியுமா? உங்களுக்கு மட்டும் ஏன் பூனைக் குட்டியைப் பிடிக்கலே?
அமைச்சர் வந்து—
உடனே வரும்படி அழைத்தீர்களாமே அரசே!
ஆமாம். சகுனத் தடை பூனை பற்றிக் கவிஞர்கள் அழகழகான பாடல்கள் பாடி வைத்திருக்கிறார்களே! இவற்றைப் பாடி ஆடிக் குழந்தைகள் கெட்டுப் போகிறார்கள்.
இனிமே யாரும் பூனை பற்றிப் பாடக் கூடாது. குழந்தைகள் பூனை பாடல்களைப் பாடி ஆடினால் பெற்றோர்களுக்கு தண்டனை என்று அறிவியுங்கள்.
அரசே இது அநியாயம்!
எதிர்த்துப் பேசாதீர்கள்!
பூனை வளர்க்கத் தடை! பூனை பாடல்களுக்கும் தடை! பூனை பொம்மை வைத்து விளையாடினால் என்ன பண்ணுவீங்க?
ஓகோ! அப்படி ஒரு வழி இருக்கா!




பூனை பொம்மை, பூனை ஓவியத்துக்கும் கூடத் தடை போடுங்கள்!
அரசே... ஏற்கெனவே நம்மைப் பார்த்து பக்கத்து நாடுகள் சிரிக்கின்றன.
மீறினால் சிறை தண்டனை விதியுங்கள்.
சொன்னதைச் செய்யுங்கள். அதோட சிறந்த கழுதைப் பாடல்களுக்குப் பரிசு! நல்ல கழுதை, ஓவியம், பொம்மைக்கும் பரிசுதாங்க!
ஒரு பூனை பொம்மை தந்தால் நூறு கழுதை பொம்மை பரிசு தரப்படும்.
சிறந்த கழுதைப் பாடல் எழுதியவர்க்கு பொன்முடிப்போடு கழுதைக் கவி மாணிக்கப் பட்டம் தரப்பட்டது!


குழந்தைகள் ஏங்கிப் போனார்கள். அரசரின் பாட்டி பெரிய மகாராணியிடம் முறையிட்டார்கள்.
ஏன் கவலைப் படறீங்க? ஒரு மாதம்தான் ஆச்சு? ரொம்ப சீக்கிரம் போட்ட ஆணையை ராஜா திரும்ப வாங்கிப்பார்!
அது எப்படி மகாராணி?
சாமி படைப்புல எல்லாம் ஒன்றுக்கொன்று சார்ந்தவை. கவலைப்படாதீங்க!
பூனைகள் இல்லாததால் எலிகள் பெருகின!
நெல்குதிர்கள் காலியாயின!


ஆடுமாடுகளை எலிகள் கடித்தன!
புடைவை துணிமணிகளை இழுத்துப் போயின!
பயமின்றிப் பகலிலேயே உலாவந்தன! மக்கள் பயந்தனர்
அரண்மனையில்—
களஞ்சியம் காலி! காய்கறி, பழம் எல்லாம் பாழ். பகலிலேயே தைரியமாக வந்து இழுக்கின்றன. பயமாக இருக்கு மகாராஜா!
துணிமணி, பண்டம் எல்லாம் பாழ் அரசே!
அப்பா, என் பிறந்த நாள் சட்டையைப் பாருங்க... எப்படிக் கடிச்சிருக்கு!


வைர நெக்லசை எலி இழுத்துக்கிட்டுப் போயிடுத்து. சுவரை இடித்து நெக்லசை எடுத்தாங்க!
அரசர் சாப்பிடும்போது—
என்ன அநியாயம்! இத்தனை துணிச்சல் எலிகளுக்கு எப்படி திடீரென்று வந்தது!
அரசே அழைத்தீர்களாமே?
நம்நாட்டு எலிகளுக்கு திடீரென்று துணிச்சல் வந்துள்ளது. பண்டம் பொருள் எல்லாம் பாழ்!
அதுமட்டுமா, நெல் வயல்களில் எலிகள் பகலிலேயே துணிச்சலாக மந்தை மந்தையாக மேய்கின்றன! பயிரெல்லாம் பாழ்!


எப்படி இவை இப்படி மாறின?
என்மேல் கோபப் படாதீர்கள் அரசே! இப்படி எலிகள் பெருகி நாட்டை அழிக்க நீங்கள் தான் காரணம்!
நான்!
ஆம் அரசே! பூனைக்குக் தடை போட்டீர்கள். அதன் விளைவுதான் இது. இயற்கைச் சமநிலை என்பது இதுதான். ஒன்றை அழித்தால் இன்னொன்று பெருகிவிடும்.
அப்படியா!
வீடுகளி லும், தானியக் கிடங்கு களிலும் எலிகள் பெருகு வதைத் தடுக்க பூனைகள் பெரிதும் உதவி வருகின்றன. எளிதாக வீட்டில் எல்லோரும் வளர்க்க வேண்டும் என்பதற் காகவே இறைவன் பூனைகளை குழந்தை கள் விரும்பும் செல் லப் பிராணியாக் கியுள்ளார்.


சகுனத் தடை என்று
பூனைக்கு தடைபோட்டீர்கள்.
எலிகள் கொல்வார் இன்றிப் பெருகி
விட்டன. பூனையைப் போல் நம்மால்
எலியை உணவாக்கிக் கொண்டு
அவை பெருகுவதைத் தடுக்க
முடியுமா?
காட்டில் உள்ள பூனைக்
கூண்டையும் திறந்து விடுங்கள்,
அவரவர் வீடுகளுக்குப் பூனைகள்
வந்து சேரட்டும்.
அமைச்சரே.. என் முட்
டாள் தனம் புரிந்தது.
உத்தரவைத் திரும்பப்
பெறுங்கள்.
அதோடு, பூனைப் பாடல்களுக்கு உள்ள
தடையையும் நீக்குங்கள் அப்பா!
சிறந்த பூனைப் பாடல்கள்
எழுதுவோருக்குப் பரிசும் தர அறி
விச்சுட்டேன் போதுமா?

# 11. நிழலின் அருமை

## உதயன் எங்கே?

ஒரு வாரத்திற்குப் பின் ஒரு நாள் மனோகரன் பள்ளிக் கூடத்திலிருந்து தன் அறைக்குள் நுழைந்த போது அங்கே உதயனின் தகரப் பெட்டியும், அவனது துணிமணிகளும் இல்லாததைக் கவனித்துத் திகைத்து நின்றான். உதயன் எங்கே போயிருப்பான்? வெகு நேரமாகியும் அவன் வராதிருக்கவே மனதுக்குள் சந்தேகம் தோன்ற அவசரமாகக் காளிமுத்துவின் அறைக்கு ஓடினான்.

அங்கிருந்த சிறுவர்கள் காளிமுத்துவையும் காணவில்லை என்று சொல்லவே, மனோகரன் பதறியடித்துக் கொண்டு வார்டனிடம் போய் விஷயத்தைச் சொன்னான்.

மனோகரன் கூறியதைக் கேட்ட வைரவநாதனின் மனம் வேதனையால் துடித்தது. அவர் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திருமதி மார்கரெட் அம்மையார் எத்தனையோ முறை எச்சரித்தும் கேளாது காளிமுத்துவைத் தன் தீய எண்ணத்திற்குப் பயன்படுத்திக் கொண்டது இவ்வளவு பெரிய விபரீதத்தில் முடிந்து விட்டதே! படிக்க வேண்டும் என்று ஆர்வமுடன் வந்த உதயனையும் அல்லவா அவன் கெடுத்துவிட்டான்! உதயன் முதன் முதலாக அங்கு வந்த அன்று, தான் அவனிடம் வேறு எங்காவது பிழைப்பைத் தேடிப் போவதை விட்டு விட்டு இப்படி அறிவில்லாமல் அனாதை ஆசிரமத்துக்கு வந்திருக்கிறாயே என்று எரிந்து விழுந்தது நினைவுக்கு வந்தது. அவர்களின் இந்த முடிவுக்குக் காரணம் தான்தான் என்று மனச்சாட்சி அவரை இடித்துக் காட்டியது.

மனோகரனையும் அழைத்துக் கொண்டு அவர் திருமதி மார்கரெட்டின் இல்லத்தை நோக்கி விரைந்தார். அப்போது தான் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி விட்டு, புல் தரையில் இடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார் அம்மையார். இருவரும் பதற்றத்துடன் வந்து நிற்பதைப் பார்த்து என்னவோ ஏதோவென்று கலவரம் தோன்ற எழுந்து வந்தார்.

வைரவநாதன் அவரிடம் காளிமுத்துவையும் உதயனையும் காணவில்லை என்பதைத் தெரிவித்தார்.

அவர்கள் எதிர்பார்த்ததைப் போல் திருமதி மார்கரெட் பரபரப்படையவோ கோபப்படவோ இல்லை! அவர் முகத்தில் சாந்தம் நிலவியது. மெல்லிய குரலில், ''மிஸ்டர் வைரவநாதன் நீங்கள் வீணாக மனதைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். அவர்கள் இரண்டு பேரும் ஓடிப் போனதற்கு நாம் எல்லோரும்தான் காரணம். அவர்கள் எதிர் பார்த்தபடி நாம் அவர்களிடம் அன்பு செலுத்தவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். நம்முடைய அன்பு உண்மையானதாக இருந்தால் அது அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களைப் பின் தொடரும்..., மீண்டும் அவர்களை இங்கு கொண்டு வந்து சேர்க்கும். "உண்மை அன்புக்கு எதையும் செய்யும் வலிமை உண்டு. உதயன் எங்கே போயிருப்பானோ, காளிமுத்து எங்கே போயிருப்பானோ என்று மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். பிரார்த்தனை

**வி. ர. வசந்தன்**

செய்யும் போது அவர்கள் திரும்ப வர வேண்டும் என்று மனம் கசிந்து இறைவனிடம் வேண்டிக் கொள் ளுங்கள். உண்மையான அன்பும், மனம் நெகிழ்ந்த பிரார்த்தனையும் அற்புதங்களை விளைவிக்கக் கூடியவை. அப்படி ஒரு வேளை வரவில்லையென்றால் அவர்கள் தேடிச் சென்ற அந்த புதிய வாழ்க்கை யாவது வெற்றியடையட்டும் என்று வேண்டுங்கள். கவலைப்பட வேண்டாம்" என்று தேற்றினார்.

வைரவநாதன் மார்கரெட் அம்மையாரை பிரமிப்புடன் ஏறிட்டுப் பார்த்தார். இவருக்குத்தான் எத்தனை பெருந்தன்மை! அனுபவத்தில் கனிந்திருந்த அந்த வார்த்தைகள் அவரது புண்பட்ட மனதுக்கு மருந்திட்டது போலிருந்தது.

அந்த பிரம்மாண்டமான மரத் தொழிற்சாலையில் காட்டிலிருந்து கொண்டு வரும் மரங்களைப் பலகைகளாகவும் கட்டைகளாகவும் தேவைக்கேற்ப வெட்டுவதற்கு இயந்திரங்கள் இருந்தன. வெட்டிய மரங்களைப் பூச்சிகள் அரித்து விடாமல் தடுக்கும் பொருட்டு இரசாயனக் கலவைகளின் மூலம் பண்படுத்தவும் பின் மெருகேற்றவும் தரம் பிரித்து அடுக்கவும் தனித்தனிப் பிரிவுகள் இருந்தன.

காளிமுத்துவும், உதயனும் பலசரக்குக் கடைக்காரரின் சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்ததும் அங்கு வேலைக்குச் சேர்த்துக் கொண்டார்கள். காளிமுத்துவுக்குப் பலகைகளை லாரிகளில் ஏற்றும் வேலை கொடுக்கப்பட்டது. உதயனுக்கு இயந்திரங்களிலிருந்து குவியுட மரத்தூளை, கோணிகளி அடைத்துக் கட்டி, எடை யிட்டு வைக்கும் வேலை.

மரப்பலகைகளையும், கட்டைகளையும் சுமந்து சுமந்து காளிமுத்துவின் தோள்கள் எல்லாம் வலி எடுக்க ஆரம்பித்து விட்டன. காலையில் எட்டரை மணிக்கு ஆரம்பித்த வேலை, சற்று நேரம் கூட ஓய்வில்லாமல் அவனை வாட்டியது. இது போல் முரட்டு வேலைகளை அதிகமாகச் செய்து பழக்கமில்லையாதலால் அவன் சீக்கிரமே சோர்ந்து போனான். உச்சி வெயில் வேறு தலையில் தீயாக விழுந்தது. அவனைப் போன்று பலரும் பலகைகளைத் தூக்கி வந்து லாரிகளில் ஏற்றிக்கொண்டிருந்தனர். பத்து லாரிகளுக்கு மேல் வரிசையாக நின்று கொண்டிருந்தன. சாயங்காலம் ஐந்து மணிக்குள் அத்தனை லாரிகளிலும் பாரம் ஏற்றி விட வேண்டும். இல்லையென்றால் ஏற்றி முடிப்பது வரையிலும் வேலை செய்ய வேண்டும். பசிவேறு



அவன் வயிற்றைக் கிள்ளியது.

அவனுக்கு மயக்கம் வருவது போலிருக்கவே, மறைவாகப் போய் சற்று ஓய்வெடுக்கலாம் என்று உட்கார்ந்தான். ஒரு சில நிமிடங்கள் கூட ஆகி இருக்காது ஒரு முரட்டுக்குர திடுக்கிட்டு எழச் செய்தது.

"என்னப்பா, மொதநாளே ஏமாத்தப் பார்கறியா...? எந்திரிச்சு போய் வேலையைப் பாரு... இல்லேன்னா செஞ்ச வேலைக்குக் காசை வாங்கிட்டு நடையைக் கட்டு" என்று உறுமிக் கொண்டு நின்றார் மேஸ்திரி.

காளிமுத்து எழுந்தான். ஒன்றுமே பேசாமல் தள்ளாடி நடந்தான். மரப் பலகைகளைத் தோளில் தூக்கிக் கொண்டு தடுமாறினான்.

கருணை இல்லத்தின் எளிதான தோட்ட வேலைகளைச் செய்வதையே அடிமை வேலையென்று நினைத்து மார்கரெட் அம்மையாரின் மீது அவதூறு பேசித் திரிந்தது அவன் மனதில் தோன்றி கண்களைக் குளமாக்கியது.

இயந்திரங்களில் இருந்து விழுந்து மலையாகக் குவிந்து கிடக்கும் மரத்தூளை அள்ளி அள்ளி கோணிப் பைகளில் அடைத்து, எடை பார்க்கும் இயந்திரத்துக்குத் தூக்கிப் போய் எடை பார்த்து, ஒரு கோணியைத் தைத்து முடிப்பதற்குள் உதயனுக்குப் போதும் போதுமென்று ஆகிவிட்டது. மரத்தூள் நாசியில் ஏறி எரிச்சலூட்டியது. தும்மித் தும்மி முகமெல்லாம் சிவந்து போயிற்று.

அவனுக்குத் தன் தந்தையின் நினைவு வந்தது. அவன் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்று ஆசைப்பட்ட அவரது முகம் நினைவில் தோன்றி அவனைத் துன்புறுத்தியது. 'அப்பா, உங்க ஆசையை நிறைவேற்றுவேன்னு ஆழிக்குப்பத்துல ஒருத்தர் விடாம எல்லார் கிட்டயும் சொல்லிட்டு



வந்தேன்... இப்ப புத்தி தடுமாறிப் போய் இப்படித் திசைமாறித் தவிச்சுட்டு நிக்கறேன்! என்னை மன்னிச்சுருங்கப்பா' என்று மனதுக்குள் புலம்பினான்.

தன் பொருட்டு காளிமுத்துவிடம் அடி வாங்கிய பின்னரும், கடைசிவரை தனக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்த மனோகரனை நினைத்தான். கருணை பொழியும் முகத்துடன் அன்பு பாராட்டிய மார்கரெட் அம்மையாரை நினைத்தான். மனம் நொந்து அழுதான்.

வெளியூர்களில் இருந்து வந்து வேலை செய்பவர்கள் தங்குவதற்காக அந்தத் தொழிற்சாலையின் பின்புறம் ஒரு மூங்கில் கொட்டகை போடப்பட்டிருந்தது. அது தான் சாப்பாட்டுக் கூடமாகவும் இருந்தது. மதியம் கொடுக்கப்பட்ட உணவு காளிமுத்துவுக்கு அரை வயிற்றுக்குக் கூடப் போதவில்லை. அவன் மேலும் கொஞ்சம் போடும்படி கேட்டதைப் பரிமாறுபவன் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் சென்றான். அவன் விடாமல் கேட்கவே கொஞ்சம் சாதத்தை வேண்டா வெறுப்பாகத் தட்டில் எறிந்து விட்டுப் போனான்.



கருணையில்லத்தில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று இரவு நிலா விருந்து நடப்பதுண்டு. அன்று எல்லா சிறுவர்களோடு மார்கரெட் அம்மையாரும் குதூகலமாகக் கலந்து கொண்டு உணவுண்பார். திறந்த வெளியில் உல்லாசமும் ஆரவாரமுமாகப் பெரு மகிழ்ச்சியோடு அந்த விருந்து நடைபெறும்.

ஒரு சமயம் எல்லோருக்கும் இனிப்பு வழங்கிவிட்டு சமையற்காரன் உள்ளே சென்ற நேரத்தில், மேஜையிலிருந்த தட்டிலிருந்து ஒரு லட்டை இரண்டாம் முறையாக ஒரு சிறுவன் எடுத்துக் கொண்டான். அதற்குள் அதைப் பார்த்துவிட்டு ஆத்திரத் தோடு அவனைத் திட்டியதுமல்லாமல், அவன் கையிலிருந்த லட்டையும் பிடுங்கிக் கொண்டான் சமையற்காரன்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த மார்கரெட் அம்மையார் விருட்டென்று எழுந்து அவ்விடத்திற்கு வந்து சமையற்காரனைக் கண்டித்ததோடு, அந்தச் சிறுவனைத் தன்னிடத்திற்கு அழைத்துப் போய்த் தன் தட்டிலிருந்த லட்டை எடுத்து அன்போடு அவனுக்கு ஊட்டினார்.

இது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகத்தான் அப்போது தோன்றியது. ஆனால் அதுவே இப்போது காளிமுத்துவின் மனதில் தோன்றி அவனை வதைத்தது. அம்மாவின் அன்பை உணராமல் போனேனே என்று தனக்குள் வருந்தினான். நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்களே, அது இது தானோ?

**ம**தியம் அரைமணி நேரமே ஓய்வு.

மீண்டும் வேலை ஆரம்பமான போது காளிமுத்துவும், உதயனும் உடலாலும், மனதாலும் மிகவும் சோர்ந்து போயிருந்தனர். ஆனாலும் வார இறுதியில் கிடைக்க இருக்கும் இருநூற்று நாற்பது ரூபாயை எண்ணி ஆறுதலடைந்தான் காளிமுத்து. ஆனால் உதயனின் மனதோ காளிமுத்துவின் பேச்சைக்



கேட்டு அறிவிழந்து அவசரப்பட்டு விட்டேனே என்று தவித்துக் கொண்டிருந்தது.

அன்று மாலை தொழிலாளர்கள் மரப் பலகைகளை லாரியில் ஏற்றிவிட்டு, கயிறுகளை மேலும் கீழும் பாய்ச்சி இறுகக் கட்டிக் கொண்டிருந்த போது, எதிர்பாராமல் நழுவிய பலகையொன்று விர்ரென்று பாய்ந்து வந்து அருகில் நின்று கொண்டிருந்த காளிமுத்துவின் முழங்காலில் இடித்தது. 'அம்மா' என்று அலறிக் கீழே விழுந்த அவன் வலியால் துடித்தான்.

செய்தியறிந்து ஓடி வந்த உதயன் அவனைத் தோளில் தாங்கிக் கொண்டு மெல்ல நடத்தி வந்து மூங்கில் கொட்டகையில் படுக்க வைத்தான். யார் யாரிடமோ போய் அவனுக்கு அடிபட்டு விட்டதைச் சொல்லிப் பார்த்தான். ஆனால், அங்கு யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை. எல்லோருக்கும் தங்களைப் பற்றிய கவலைகளே பெரிதாக இருந்தன.


உதயன் மீண்டும் அந்த மூங்கில் கொட்டகைக்குத் திரும்பி வந்தபோது காளிமுத்து வேதனையில் முணங்கியவாறு உறங்கிப் போயிருந்தான். அவன் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர் கன்னங்களில் உலர்ந்து போயிருந்தது.

அடங்காத முரடனாகவும், தான் தோன்றியாகவும் கருணை இல்லத்தில் எதற்கும் கட்டுப்படாமல் வளையவந்த காளிமுத்து இங்கு வந்த ஒரே நாளில் கலங்கிக் கண்ணீர் சிந்தியதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.


அவன் காலடியில் அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த உதயனுக்கு எதிர்காலம் என்பது ஒரே இருளாகத் தெரிந்தது. இனி வாழ்நாள் முழுவதையும் இப்படி வேதனையிலும், கண்ணீரிலும் கழிக்க வேண்டியது தானோ என்று நினைத்துக் கலங்கினான்.

பொழுது சாய்ந்து இருள் மண்டியது. தொழிலாளர்கள் தங்கள் இரவு உணவை முடித்து விட்டு ஆங்காங்கே படுக்கைகளை விரித்துக் கொண்டிருந்தார்கள். உதயனும் காளிமுத்துவின் அருகில் படுத்துக் கொண்டான். அரைத் தூக்கத்தில் எங்கோ இருளுக்குள் ஆழ ஆழ அமிழ்ந்துவது போல் தோன்றவே திடுக்கிட்டு எழுந்தான். மீண்டும் தூக்கம் வராமல் தவித்தவன் மனதில், கருணை ததும்பும் மார்கரெட் அம்மையாரின் முகம், மையிருட்டுக்குள் ஒளிக்கீற்று போல் தோன்றியது.


(அடுத்த இதழில் முடியும்)




1




2




3



7




8




9

சில பொருள்களைப் பார்த்த உடனேயே சிலருடைய நினைப்பு நமக்கு வரும். புல்லாங்குழலைப் பார்த்த உடனேயே கண்ணபிரானின் நினைப்பு வரும். வில்லைப் பார்த்ததும் இராமனுடைய நினைப்பும், முறுக்கு மீசையைப் பார்த்ததும் பாரதியாரின் நினைப்பும் வரும். காரணம் இவர்களோடு தொடர்புடையவை இப்பொருள்கள். இதே போல், சில அறிவியல் அறிஞர்களின் நினைப்பும் சில பொருள்களைப் பார்த்த உடனே அல்லது சிலரைக் கண்ட உடனே வரும். அல்லது உங்களைப் போல் சிறுவராக இருக்கும்போது இவை அவர்களது அறிவியல் ஆர்வத்தைத் தூண்டியிருக்கும். அத்தகைய பொருள்கள் பத்து இங்கே தரப்பட்டுள்ளன. இவற்றோடு தொடர்புடைய அறிவியல் அறிஞர்களைக் கண்டு பிடித்து அந்த




4



5



6



10

# யார் நினைப்பு வருகிறது?

## — போட்டி

எண்களுக்கு எதிரே எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.7.97. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால், பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
**கோகுலம்,**
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடு தாங்கல்
சென்னை- 97.



# பஞ்சு போல நுரை! பனிந்து போல சுத்தம்!

உடல் அழுக்குப் போக வேண்டும் மென்றால் சோப்புத் தேய்த்துக் குளிக்கிறோம். சாப்பிடும்முன் கைகளை சோப்புப் போட்டுத் தேய்த்துக் கழுவி சுத்தம் செய்து கொண்டு வருகிறோம். துணியில் அழுக்கு இருந்தால் உடனே சலவை சோப்புப் போட்டுத் துவைக்கிறோம். அல்லது சோப்புத்தூள் கரைத்த நீரில் துணிகளை ஊறவைத்து எடுக்கிறோம். ஆக, சோப்புக்கு அழுக்கை நீக்கும் குணம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். சோப்புக்கு இந்த அழுக்கை நீக்கும் சக்தி எங்கிருந்து கிடைக்கிறது? இந்த சக்தி அழுக்கை எப்படி நீக்குகிறது?

சோப்பில் ஏராளமாக நுரைவரும் சோடாக் கரைசல் சேர்ந்துள்ளது. இது நீரில் கரையும்போது நுரை உண்டாகிறது. அழுக்கையும் பிசுக்கையும் நீக்கும் தன்மை நுரைக்கு உண்டு. இந்த இரகசியத்தை நம்முன்னோர் நன்கு அறிந்து வைத்திருந்தனர். சிகைக்காயை ஊரவைத்து அரைத்துத் தலைக்குத் தேய்த்துக் குளித்தனர். சிகைக்காய் நன்கு நுரை தரும். இதைப்போலவே உசில மரத்தின் இலைப்பொடி, பூந்திக் கொட்டை ஆகியவையும் கூட நுரைத்து அழுக்கைப் போக்கக் கூடியவை. காட்டுவாசிகள் "ஆம்லிக் கொடி" என்ற தாவரத்தின் தண்டு பாகத்தைக் கசக்கி நுரைவரும்படி செய்து பயன்படுத்து கிறார்கள். எனவே நுரைக்கு அழுக்கையும் பிசுக்கையும் போக்கும் சக்தி உள்ளதை சோப் கண்டுபிடிக்கும் முன்பே மக்கள் அறிந்திருந்தனர்.

இப்பொழுது ரசாயன ஊக்கிகளைக் கொண்டு தலைப் பிசுக்கைப் போக்க ஏராள நுரைவரும் ஷாம்பு வகைகளும், துணி அழுக்கைப் போக்க, டிடெர்ஜென்ட் பொடிகளும் வந்துள்ளன. போட்டுக் கலக்கியதும் நுரைபொங்கித் திரள்கிறது. இதைக் கையில் கூட அள்ளி எடுத்து அழகு பார்க்கலாம்.

சாப்பிடும் முன்பும், விளையாடிவிட்டு வந்த உடனேயும் கைகளை அழுக்குப் போக சோப்புப் போட்டு சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இப்பொழுது வரும் உடல் அழுக்கு நீக்கி சோப்புகளில் கிருமி நாசினியும் சேர்க்கப்படுவதால் கைகளில் உள்ள அழுக்கும் கிருமிகளும் நீக்கப்பட்டு நோய் பரப்பும் கிருமிகள் உள்ளே போகும் வாய்ப்பு குறைக்கப்படுகிறது.

— ரே




**கை கழுவும் சாக்கில் நுரைத்திரளை அள்ளிப்பார்க்கும் சிறுமி கௌசல்யா.**

வண்ணப்படம்: ஸ்ரீஹரி

திக்.. திக்... திக்.. கதைகள்!

பயமின்றிப் படியுங்கள்!



# ஈட்டிமுடியார் சாபம்!

**சின்னபாபு**

__இதுவரை நடந்தது__

ரமணியும், பொன்முடியும் உயிர் நண்பர்கள். சென்னையில் விடுதியில் தங்கிப் படித்து வந்தார்கள். ரமணியின் தந்தை கல்கத்தாவில் பிரபல வங்கி ஒன்றின் மேலாளர். அடிக்கடி மாற்ற லாகும் பணி என்பதால் படிப்புக் கெடாமல் இருக்க சென்னையில் படித்து வந்தான். பொன் முடியின் தந்தை ஏலகிரி மலையில் பெரிய எஸ்டேட் முதலாளி. அவரது ஐம்பதாவது பிறந்த நாளில் கலந்து கொள்ள ரமணியையும் அழைத்து வருகிறான் பொன்முடி. வரும் வழியில் பாறை சரிந்து விட்டதால் சுற்றிக் கொண்டு வந்து அவர்கள் மேல் கேம்புக்கு வந்து சேரும் போது இரவு பன்னி ரண்டு மணியாகி விடுகிறது. பொன்முடியின் தந்தையும் அண்ணனும் வரவேற்கிறார்கள். தனக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒட்டல் அறையில் ரமணி தங்குகிறான். காலையில் பார்த்தபோது பொன்முடியின் தந்தைக்குப் பரிசளிக்க அவன் கொண்டு வந் திருந்த புத்தம்புது விலைமிக்க சிட்டிசன் கைக்கடிகாரம் காணவில்லை என்பதை அறிகிறான். போலீசுக்குப் புகார் தர அவன் முயன்ற போது பொன்முடி தடுத்து விடுகிறான். அவன் தன் தந்தையின் விருந்தாளி என்பதால், அவருடைய அனுமதி இன்றிப் போலீசில் புகார் செய்யக்கூடாது என்று தடுக்கிறான். பொன்முடியின் தந்தையிடம் விஷயத்தை விளக்குகிறான் ரமணி. கண்கண்ட தெய்வமாகத் தான் வணங்கும் ஈட்டிமுடியார் என்ற சாமியாரிடம் அனுமதி கேட்க வேண்டும் என்கிறார் அவர். அன்று மாலை எல்லோரும் ஈட்டி முடியாரிடம் போகிறார்கள். அவர், பள்ளம் தோண்டி அதில் படுத்துக் கொண்டு தியான சமாதியில் மூடிக் கொள்கிறார். மேலே படியுங்கள்.

ஈட்டிமுடியார் சமாதிக் குழிக்குள் படுத்து, குழியை மூடி நான்கு மணி நேரம் ஓடிவிட்டது. ரமணி இப்படிப்பட்ட காட்சியைக் காண் பது அதுவே முதல் முறை. அதனால் அவன் மனம் பதைபதைத்துக் கொண்டே இருந்தது.



உயிருடன் உள்ள ஒருவரை இப்படிக் குழிக்குள் இருக்க வைத்து மண்ணைப் போட்டு மூடிக் கெட்டிப்பது எத்தனை பயங்கரமான செயல்! எல்லோரும் செய்யச் சொன்னதால் அவனும் பலகை மேல் மண்ணைத் தள்ளினான். ஒரு வேளை, நான்கு மணி நேரமானதும், குழியைத் திறக்கும் போது அவர் உயிருடன் இல்லை என்றால் அது எத்தனை கொடுமை! அதில் அவனுக்கும் பங்கு உண்டு அல்லவா?

ரமணி மட்டுமே அப்படி இருந்தானே தவிர, வேறு யாரும் அதைப் பற்றிக் கவலைப்படவே இல்லை! சூலத் தாண்டவர் என்று அழைக்கப்பட்ட எல்லா சூலங் களுக்கும் பால், தயிர், தேன், சந்தனம் அபிஷேகம் செய்து, சந்தனம் குங்குமம் இட்டு, முழு எலுமிச்சம் பழம் செருகி, பூமாலை சாத்தி அர்ச்சனை பண்ணினர், ஈட்டிமுடியாரின் சீடர்கள். சிலர் மாவிளக்குக் கூடப் போட்டார்கள். தேங்காய்கள் உடைக்கப்பட்டு, தாம்பூலத் தட்டுகள் வரிசை வரிசையாக சமாதிக் குழிக்கு அருகே வைக்கப்பட்டன. தட்டுக்கு உரியவர்கள் அதன் அருகே வந்து பயபக்தியுடன் நின்றனர். பம்பையும உடுக்கையும் போட்டி போட்டு சூழ்நிலைக்கு ஒரு புதிய வேகத்தையும் பரபரப்பையும் தந்தன.

"அங்கிள், ஈட்டிமுடியார் எதற்காக தியான சமாதியில் இருக்கிறார்?" என்று பொன்முடியின் அப்பாவிடம் கேட்டான் ரமணி.

"ஈட்டிமுடியார் மக்களின் பல்வேறு பிரச்னை களுக்கும் தீர்வுக்காண வழி கூறுகிறார் இல்லையா? அப்படிக் கூற அவருக்கு ஞானதிருஷ்டி தேவை. அந்த ஞானதிருஷ்டியை இந்த தியான சமாதி நிலை அருள்கிறது. மாதத்திற்கு நான் கைந்து முறை இப்படி இருப்பார். மோட்டார் பேட்டரியை சார்ஜ் பண்ணுவது இல்லையா? அந்த மாதிரித்தான்" என்று சிரித்தார் அவர்.

ஈட்டிமுடியார் தியான சமாதி இருந்த இடத்துக்கு மேல் பன்னீர் தெளித்தார்கள். பெரிய பித்தளைத் தட்டில் கோலம் போட்டு, அதில் அரிசி பரப்பினார்கள். ஒரு வாழைப் பழத்தில் சின்ன திரி சூலம் ஒன்றைச் செருகி வைத்தார்கள். மஞ்சள் பூசிய முழுத் தேங்

காய் ஒன்றை அரிசித் தட்டில் வைத்தார்கள்.


"இதெல்லாம் எதற்காக அங்கிள்?" என்று கேட்டான் ரமணி.

"ஈட்டிமுடியாரின் தியான சமாதி நிலை கலையும் நேரம் நெருங்கிவிட்டது. அரிசித் தட்டில் வைக்கப்பட்டுள்ள இந்த முழுத் தேங்காய் வெடித் துச் சிதறும். தியானம் முடிந்து விட்டது. சமாதியைக் கலைத்து விடலாம் என்பதற்கு இது பச்சைக் கொடி. நீதான் பார்த்துக் கொண்டே இருக்கிறாயே?" என்றார் அவர்.

உடுக்கையும் பம்பையும் துரித கதியில் முழங்கின. சூலங்களுக்கு அபிஷேகம் செய்த பால் கலந்த நீரை எடுத்து வந்து சீடர்கள் சுற்றியிருந்தவர்கள் மேல் தெளித்தார்கள். ரமணியின் உட லிலும் சில துளிகள் பட்டன. பன்னீர் மணம் கமகமத்தது. அதே நீரை அரிசித் தட்டில் வைக்கப்பட்டிருந்த மஞ்சள் பூசிய தேங்காய் மேலும், பரத்தி வைக்கப்பட்டிருந்த மங்கலப் பொருள்களின் மேலும் கூடத் தெளித்தார்கள்.

திடீரென்று ஊசி வெடி வெடிப்பது போன்ற சத்தம்! மஞ்சள் பூசிய முழுத் தேங்காய் வெடித்துச் சிதறியது! ரமணி உட்பட எல்லோரும் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். பரபரவென்று சமாதிக்கு மேல் போடப்பட்டிருந்த மணலை அகற்றினார்கள். பலகைகளைப் பிரித்தார்கள். குழிக்குள் ஈட்டிமுடியார், எந்த நிலையில் படுத்துக் கொண்டாரோ அதே நிலையில் சிரித்தபடி கண்களை மூடியபடி இருந்தார்! ரமணி நிம்மதிப் பெருமூச்சு விட்டான். குழிக்குள் இறக்கப்பட்ட சின்ன ஏணியில் ஏறி, ஈட்டிமுடியார் பெருமிதம் முகத்தில் பொங்க மேலே வந்தார். அவருக்கென்று போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து, சுற்றி இருந்தவர்கள் அனைவரையும் பார்த்துக் கை அசைத்து வாழ்த்தினார்.

பிரச்னைகளோடு வந்திருந்தவர்கள் வரிசை கலையாமல் தாம்பூலத் தட்டில் காணிக்கை வைத்துக் கும்பிட்டு எடுத்துக் கூற, பொறுமையோடு செவிமடுத்த ஈட்டிமுடியார், பரிகாரம் கூறினார். பொன்முடியின் தந்தை முறை வந்தது. காணிக்கையோடு தாம்பூலத் தட்டை அவர் காலடி யில் வைத்துப் பணிந்து, விஷயத்தை விளக்கினார்; சைகை காட்டி ரமணியை அழைத்தார். அவனும் சென்று ஈட்டிமுடியாரைப் பணிந்தான். மக்களின் போற்றுதலுக்குரிய, மகாசக்தி



# கோடை விடுமுறைப் போட்டி-1 முடிவு

போட்டி மிக எளிதாக இருந்தது என்பதைக் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையிலிருந்து தெரிகிறது. பெரும்பாலானவர்கள் சரியான விடை தந்திருக்கவே, குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களை முடிவு செய்யக் கை கொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. மல்லிகா பால்ராஜ், பத்தமடை
2. ஜி. குருவாயூரப்பன், அட்டகட்டி,
3. ச. தீபக், வேடசந்தூர்,
4. எ.நசியா சுல்தானா, மயிலாடுதுறை
5. வி.பி. இராகவேந்திரன், புத்தூர், திருச்சி - 17.
6. அ.அமலன், இடிகரை
7. கே. இந்துமதி, தேவனூர் புதூர் அஞ்சல்
8. ஆர். கௌசல்யா, நாங்குநேரி
9. ஐ. முகமது ஹாரூன் பாட்சா, வத்தலகுண்டு
10. சி.கண்ணன், செல்லூர், மதுரை-2.
11. பி.பிந்துசாரதி, வியாசர்பாடி, சென்னை-39
12. வி. சரோஜா, வேலூர் -7.
13. எ. யாசின், சென்னை-114.
14. வி. பூர்ணகலா, வடக்கு அரிய நாயகிபுரம்
15. பி. வசுமதி, கொமாரபாளையம்
16. என். சக்திபாலன், சாக்கோட்டை அஞ்சல்
17. எம். நிவேதிதா தேவி, மலையப்பபுரம், முசிறி
18. கே. ரஞ்சினி, குறிஞ்சிநகர், பாண்டிச்சேரி-8
19. பா. ஜெய்சிங் ராஜன், தஞ்சை-6
20. பி.எலிசபெத், முதலியார்பேட்டை, பாண்டிச்சேரி-4.

சரியான விடை

பாட்டி, ரம்பம், திருடன் = பாரதி

வண்டி கால் புலி = டில்லி

வைரம், காகம், சிங்கம் = வைகாசி

குதிரை, எருமை, தெப்பம், பூனை, ஏர், மகுடி, நாமம், மரம், பன்றி = திருப்பூர் குமரன்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள், கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

பொருந்திய ஒரு மகானின் முன்பு நிற்கிறோம் என்ற பக்தி உணர்வோடு இருந்தான் ரமணி.

"வாட்சைப் பறிகொடுத்த தம்பி நீதானா?" என்று ரமணியை ஊடுருவிப் பார்த்த சட்டிமுடியார், "நாளை மறுநாள் சூரிய உதயமானதும், யாரையாவது அனுப்பி வையுங்க. வாட்ச் எங்கே இருக்கும் என்பதைச் சொல்லியனுப்புறேன்" என்றார் கம்பீரமாக.

மீண்டும் ஒருமுறை வணங்கிவிட்டு, பொன்முடியின் அப்பாவோடு கிளம்பினான் ரமணி.

"நாளை மாலை விழா முடிந்ததும் சென்னைக்குக் கிளம்பலாம்னு இருந்தேன். இப்படிப் பயணத்தை ஒத்திவைக்கும்படி ஆச்சே!" என்று புலம்பிக் கொண்டே இருந்தான் ரமணி.

மறுநாள் காலை, தன்னுடைய வழக்கப்படி சீக்கிரமே எழுந்து ஜாகிங் கிளம்பினான் ரமணி. நகரத்தில் டீசல், பெட்ரோல், நாக நிறைந்த கனத்த காற்றையே சுவாசித்திருந்தவனுக்கு, மலைப்பகுதியின் மூலிகை மணம் கலந்த காற்று புதிய உற்சாகத்தையும் தெம்பையும் அளித்தது.

மலைப்பாதையில் ஒரு திருப்பம். தோளில் கனத்த கோணியுடன், காகிதக் குப்பை பொறுக்கியபடி ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான். அவன் கையில், ரமணிக்குப் பழக்கமான ஏதோ ஒரு பொருள்!

"தம்பி இங்கே வா!" என்று அழைத்து, அந்தப் பொருளைக் கையில் வாங்கிப் பார்த்தான் ரமணி. ஆம், அது ஓர் அழகான வெல்வெட் பெட்டி! வாச் பெட்டி! சந்தேகமே இல்லை. சிடிசன் வாட்ச் இருந்த அதே பெட்டிதான்!

அமெரிக்காவில் இருந்த ரமணியின், மாமா, ஆறு மாதங்களுக்கு முன் அவனுடைய பிறந்த நாள் பரிசாக அதை அனுப்பியிருந்தார். பெட்டியின் மூடியில் வலது பக்கத்தில், ஐ.நா. நிறுவனத்தின் பொன் விழாவை ஒட்டி, அமெரிக்கா வெளியிட்டிருந்த சிறப்புத் தபால் தலையை ஒட்டி, ஐ.நா.சபை அஞ்சலகத்திலேயே இலேசாக முத்திரை குத்தி, அனுப்பியிருந்தார் மாமா. அவனுடைய சித்தப்பாவும் ஒரு சிடிசன் வாட்ச் பரிசளித்திருந்தார். அதனால், மாமா அனுப்பியதை அப்படியே பொன்முடியின் அப்பாவுக்குப் பரிசளிக்கக் கொண்டு வந்திருந்தான் ரமணி. அதுதான் திருட்டுப் போய்விட்டது. ஆனால் அது இருந்த வெல்வெட் பெட்டி மட்டும் இதோ, இந்தச் சிறுவன் கையில்! ஒரே ஒரு மாற்றம். பெட்டியின் மூடியில் இருந்த ஐ.நா.சபை சிறப்புத் தபால் தலையைக் காணவில்லை! தபால்தலை பிய்க்கப்பட்ட அடையாளம் நன்கு

தெரிந்தது!

"தம்பி, இந்தக் காலிப் பெட்டியை எனக்குத் தருகிறாயா? பத்து ரூபாய் தரேன்?" என்று கேட்டான்.

சிறுவனுக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி.

"தம்பி, இந்தப் பெட்டி எங்கே கிடைச்சது?"

"இங்கேதான் தொழிலாளர் குடியிருப்பில் எட்டாவது பிளாக். பொதுக் குப்பைத் தொட்டியில்."

மனத்தில் ஏதோ திட்டம் போட்டுக் கொண்ட ரமணி, உடனே ஓட்டலுக்குத் திரும்பினான். அயல்நாட்டுப் பேனா நண்பர்களிடமிருந்து வந்து, பதில் எழுத வேண்டியிருந்த நான்கு கடிதங்களை அவன் கொண்டு வந்திருந்தான். அவைகளை எடுத்து தபால் தலை ஒட்டப்பட்ட காலி உறைகளை மட்டும் மேஜை மேல் வைத்து விட்டு, செய்தித்தாளைப் படிக்க ஆரம்பித்தான்.

அறைக் கதவைத் திறந்துகொண்டு துடைப்பத்துடன் சிறுமி ஒருத்தி உள்ளே வந்தாள். பேச்சுக் கொடுத்ததில் அவள் பெயர் பொன்னாத்தா என்பதையும், தினமும் அவள் தான் ஓட்டல் அறைகளைப் பெருக்க வருபவள் என்பதையும், வாட்ச் காணாமல் போன அன்று மட்டும் தேள் கொட்டி விட்ட காரணத்தால் அவளால் வரமுடியாமல் போகவே அவள் அண் ணன் சிவபுரி வந்த தகவலையும் தெரிந்து கொண்டான்.

மேஜை மேல் கிடந்த தபால்தலைகளுடன் கூடிய அயல்நாட்டுத் தபால் தலை உறைகளைக் கண்டதும் பொன்னாத்தா அடக்க முடியாத ஆவலுடன், "அண்ணா, இவைகளை எனக்குத் தருவீங்களா?" என்று கேட்டாள். ரமணி பேச்சுக் கொடுத்தான்.

"எங்க அண்ணனுக்காகத்தான் கேட்கிறேன். அவனிடம் இந்த மாதிரி தபால் தலை ஒட்டிய ஆல்பம் கூட இருக்கு" என்று ரமணி விரித்த வலைக்குள் சிக்கினாள் பொன்னாத்தா.


"உங்க அண்ணனுடைய ஆல்பத்தை நான் பார்க்கக் கொண்டு வந்தா கண்டிப்பாக இவைகளைத் தருகிறேன்."

அடுத்த அரைமணியில் பொன்னாத்தா, சிவபுரியின் ஆல்பத்துடன் வந்தாள். அடக்க முடியாத ஆவலுடன் ஆல்பத்தைப் புரட்டிக் கொண்டே வந்தான் ரமணி. ஆல்பத்தில் கடைசியாக ஒட்டப்பட்டிருந்த தபால்தலை, ஐநா. பொன் விழா சிறப்புத் தபால்தலை! தேதி கூட முத்திரையில் அழகாகத் தெரிந்தது!

ஆல்பம் சாதாரணமானதுதான். டிராயிங் நோட்டுக் காகிதங்களை வைத்து, கனத்த நூலைக் கொண்டு தைக்கப்பட்டிருந்தது. இரண்டு முறை புரட்டியதில் நூல் அறுந்து விட்டது. பொன்னாத்தா பதறினாள்.

மாலை விருந்தில் பரிமாற சென்னையிலிருந்து இனிப்பு வாங்கிக் கொண்டு வந்திருந்தான் பொன்முடி. அந்தப் பெட்டி, ரமணியின் அறையில்தான் இருந்தது. அந்தப் பெட்டியை, இனிப்புக் கம்பெனியின் பெயர் அச்சடிக்கப்பட்ட, அழகான பளபள சாட்டின் பட்டு நாடாவைக் கொண்டு கட்டியிருந்தார்கள். அந்த நாடாவைப் பிரித்துக் கொடுத்தான் ரமணி. சிறுமிக்குக் கொண்டாட்டமான கொண்டாட்டம்!

"அண்ணா, இது இங்கேயே இருக்கட்டும். நான் வேலையெல்லாம் முடிஞ்சு சாப்பிடப் போகும்போது எடுத்துக் கொண்டு போகிறேன்" என்று போனாள் பொன்னாத்தா.




"சொல்லுடா கண்ணா, 'அ'ன்னு சொன்னால் ஞாபகம் "அம்மா'வா, 'அப்பா'வா?"
"அல்வா."
— ஜே. பிரஸன்னா

சிறுமி சென்றதும் ரமணி யோசித்தான். வாட்ச் போன விவரமும் எடுத்தவர்களைப் பற்றிய விவரமும் தெரிந்து விட்டது. பொன்முடியின் அப்பாவிடம் கூறிவிடலாமா என்று ஒருகணம் எண்ணினான். ஈட்டிமுடியார் கூறியதை நினைத்துப் பார்த்தான்.

"ஜாக்கிரதை ரமணி. ஈட்டிமுடியார் கூறியதை மீறி அவர் சாபத்திற்கு ஆளானால் என்ன நடக்கும் என்பதை யாராலும் கூறமுடியாது!" என்று பொன்முடி எச்சரித்ததை எண்ணித் தயங்கினான். அதோடு இப்பொழுது கூறினால் வீண் கலாட்டாவாகி, விழாவின் மகிழ்ச்சியையும் அது பாதிக்கலாம் என்று தோன்றவே, பொன்முடியின் தந்தையிடம் தன் கண்டுபிடிப்பைக் கூறும் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

*(மன்னியுங்கள்! அடுத்த இதழில் கண்டிப்பாக முடிந்துவிடும்!)*


சிரிப்...
"மாடு மேய்க்கறதுக்கு ஆறு மாசம் டிரெயினிங் கொடுக்குறாகளாம். வாரீயா போவோம்?"
— நெற்குப்பை கி. மனோகரன்
"ஏண்டா, அவன் மூணு தரம் அவுட் ஆயிட்டான்! ஆனா, இன்னும் விளையாடிட்டிருக்கானே?"
"பந்து அவனுதாச்சே!"
— எல். கோபாலகிருஷ்ணன்.
"கோடை விடுமுறையிலகூட உங்க பையன் கணக்குப் போடறானே!"
"அடுத்த வருசம் பண்டிகைகள், தலைவர் பிறந்த நாள் மற்றும் கோடை விடுமுறை எல்லாம் சேர்த்து மொத்தம் எத்தனை நாள் லீவு வருதுன்னு பாக்குறான்"
— அ. பேச்சியப்பன்
"கலவரம்" உள்ள காய் எதுன்னு சொல்லு?
"தெரியலையே..."
"ஜாதி"க்காய்தான்
— ச. சிவக்குமார்
"எங்க அப்பா வெளியூர் போய் வாங்கி வந்த பெட்டியில எந்த துணியும் வெக்க முடியிலேடா"
"ஏண்டா?"
"அது வானொலிப் பெட்டி"யாச்சே
— கி. விஜயக்குமார்




**உயர்ந்த மனம்,** வி.ர. வசந்தன், பக் 132, ரூ.25/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை- 600 017.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் முத்தான பத்துச் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு இது. ஒவ்வொரு கதையும் ஒரு தனியான குணசித்திரத்தை, தனிப் பண்பை; வித்தியாசமான கோணத்தில் தருகிறது. நல்ல பயனுள்ள தயாரிப்பு.

**சாமர்த்தியக் கதைகள் தொகுதி ஏழு,** பேராசிரியர் எ. சோதி, பக்.82, ரூ.15/ நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி 605 003.

திறமையான முடிவு காணும் 15 சிறு கதைகளின் தொகுப்பு. இந்தக் கதைகளைப் படித்தால், இதற்கு முந்திய ஆறு தொகுதிகளையும் படிக்கத் தூண்டும்! குழந்தைகளுக்குக் கதை கூறத் தெரியாமல் திண்டாடும் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களும்கூட நன்கு பயன்படும். மருந்துக்குக் கூட ஒரு படம்கூட இல்லாதது கவலைப் படும்படியாகத்தான் உள்ளது.

**கூடை நிறைய லட்டு,** தொகுப்பாளர் கொ.மா. கோதண்டம், பக்.96, ரூ.18/- நர்மதா பதிப்பகம் 16/7, ராஜா பாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர் சென்னை-600 017.

அய்க்கண், தேவி நாச்சியப்பன், அரு.வி. சிவபாரதி, இருங்கை சேதுபதி, அருப்புக்கோட்டை செல்வம், வ. முத்துகிருஷ்ணன், க.சிவசங்கர், ஜி.கே. கண்ணன், கொ.மா.கோ. இளங்கோ, மு. பாலசுப்ரமணி, ரா.ப. ராஜப்ரியா, ரா. பொன்ராசன், கொ.மா.கோதண்டம் ஆகியோரின் பன்னிரண்டு சிறுகதைகளைக் கோத்த அழகிய மாலை இது. பல கதைகள் கோகுலத்தில் வெளிவந்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. சிறுவர்க்கு எழுத விழைவோருக்கு வழிகாட்டியாக அமையும். படங்கள் இருந்திருந்தால் இன்னும் அதிகச் சிறப்பாக இருக்கும்.

**காட்டுக்குள்ளே திருவிழா,** எம்.என். காந்திமேரி, பக்.88, ரூ.36/- நவ ஜோதி வெளியீடு, 20. மாதா கோவில் வீதி, பத்மினி நகர், புதுச் சேரி 605 012.

குழந்தைகள் படிக்கவும், மேடையேற்றி நடிக்கவும் ரசித்துச் சுவைக்கவும், பொருத்தமானதாக ஏழு அருமையான நாடகங்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்கள். நாடகமந்தர் பெரும்பாலும் விலங்குகளும், சிறுவருமாக இருப்பது விரும்பத்தக்க உத்தி. ஒவ்வொரு நாடகமும் ஒரு நல்லதை அல்லது குணத்தை வலியுறுத்துகிறது. உரையாடல்களை எல்லாம் பேச்சுத் தமிழிலேயே அமைத்திருப்பது நாடகங்களுக்கு வேகத்தைத் தந்திருக்கிறது. பார்க்கும் படிக்கும் குழந்தைகளை நாடகத்துடன் ஒன்றிவிடச் செய்கிறது. தாள், அச்சு, அமைப்பு எல்லாம் தரமான தயாரிப்பாக, அயல்நாட்டுப் பதிப்போ என்று மயங்கும்படி உயர்ந்திருக்கிறது. ஆனால் ஒரு ஓவியம் ஒன்றுகூட இல்லாதது மனதைக் கனக்க வைக்கிறது.

**வால்ட் டிஸ்னி வாழ்க்கை வரலாறு,** எஸ். விஜயலட்சுமி, பக்.78, ரூ.15/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை 600 017.

உலகம் முழுதும் உள்ள சிறுவர் மகிழும்

'மிக்கிமௌஸ்', 'டொனால்ட் டக்' போன்ற சிரஞ்சிவிக் கதாபாத்திரங்களைப் படைத்த வால்ட் டிஸ்னியின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல் இது. பிறப்பிலிருந்து தொடங்கி அவர் உயர்ந்த நிலையை அடையப் பட்டபாடுகள், கடுமையான உழைப்பின் வெற்றிகள் என்று எல்லா நிகழ்ச்சிகளும் இறப்புவரை தரப்படுகின்றன. அலுப்புத் தட்டாத நடை. படங்கள் அல்லது புகைப்படங்கள் இருந்தால் மதிப்பு இன்னும்கூடக் கூடியிருக்கும்.

**பெரியவர்களைச் சிந்திக்க வைத்த சிறுவர் கதைகள், அருப்புக்கோட்டை செந்தமிழ்க் கிழார், பக்கம் ரூ.21/- மணிமேகலை பிரசுரம், 6. தணிகாசலம் சாலை, சென்னை- 600 017.**

சிறுவர்களைக் கதைமாந்தராக்கி, அவர்களுடைய குறையபாடுகளை நீக்கப் பாடுபடும் முயற்சி சிறுவர் கதைகளுக்கான கதைக் களங்களில் ஒருவகை. இந்த ஆசிரியர் பெரியவர்களின் குணக் குறைபாடுகளை கதைக்களமாக்கி சிறுவரைக் கொண்டு அவர்களைத் திருத்த வைத்திருக்கிறார்! கடினமான முயற்சி. எத்தனை வகையான குறைபாடுடைய பெரிய பாத்திரங்கள்! அவர்களை செம்மைப் படுத்த எத்தனை சுவையான உத்திகள்! பெரியவர்களுக்கு நல்ல விருந்து. குழந்தைகளும் ரசிக்கலாம். உள்ளே படங்களை வரைந்தவரது பெயர் தரப்படவில்லை.

**சிறுவர்களுக்கான சின்ன சின்ன பாடல்கள், நாகை மனோகரன், பக்.64, ரூ.15/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளன் தெரு, சென்னை, 600 017.**

குழந்தைகளின் மனம் கவரக்கூடிய 60 பொருள்களில் எழுதப்பட்ட சந்தம் நிறைந்த பாடல்களின் தொகுப்பு இது. வழக்கமான தலைப்புகளுடன் யாரும் அதிகமாகக் கையாளாத தலைப்புகளிலும் பாடல்கள் உள்ளன. உ-ம் சாலை, ஊசி, மீசை, சந்தத்தின் அழகு கண்டிப் பாகக் குழந்தைகளைப் பாட வைக்கும்.

சாலை நல்ல சாலை
சன்ன மான சாலை
மாலை போல நீளமாய்
மண்ணில் செல்லும் சாலை
நெளிந்து செல்லும் சாலை
நீளமான சாலை
குழைந்து செல்லும் சாலை
குறுக லான சாலை
தாரில் செய்த சாலை
தங்க மான சாலை
காரில் செல்வோம் நாளை
கமலா வாடி காலை - பக்.21

படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. அருமையான நூல்.

**துணுக்குகள் எழுதுவது எப்படி; வந்தியத் தேவன், பக் 184, ரூ.35/- மணிமேகலைப் பிரசுரம், 6. தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.**

துணுக்குகளின் அருமை பெருமைகள், அவைகளை எழுதும்போதும், சுருக்கும் போதும் மேற்கொள்ள வேண்டிய முறைகள், சில சொற்களை அல்லது பெயர்களைக் குறிப்பிடுகையில் குழப்பமின்றிச் செயல்பட வேண்டியமுறை எல்லாம் மிகவும் விளக்கமாகச் சுவையாகத் தரப்பட்டுள்ளன. துணுக்கு எழுத விரும்புவோர்க்கு வழிகாட்டியாக அமையும் நூல். பயனுள்ள புதுமையான முயற்சி.

— ரே


---

''கொட்டினால் அள்ள முடியாதது எது?''

''தெரியலையே!''

''தேன்தான்!''

— எஸ். ஸ்ரீராம்




## தாத்தா

தாத்தா தாத்தா தாத்தா
தங்க குணத் தாத்தா
பாத்தால் துன்பமெல்லாம்
பறக்கச் செய்யும் தாத்தா

கதைகள் சொல்லும் தாத்தா
கம்பால் நடக்கும் தாத்தா
எதையும் அன்பால் நமக்கு
எடுத்துக் கூறும் தாத்தா

அனுபவங்கள் எல்லாமே
ஆர்வமாகச் சொல்லியே
மனதில் பதிய வைத்துமே
மகிழ்ச்சி கொள்ளும் தாத்தா

- எஸ். முத்துச்செல்வி,
சென்னை - 82



## தொலைக்காட்சி

வண்ண வண்ண தொலைகாட்சி
வாண்டுகள் விரும்பும் மகிழ்வூட்டி!
கண்ணை கவரும் தொலைகாட்சி
காண்பதற்கரிய திரைப் பெட்டி!

தென்னை மரங்கள் நடும் விழா!
தேரை இழுக்கும் திருவிழா!
வண்ண வண்ண மணவிழா!
வாசம் மிக்க மலர்விழா!

கண்டு களிக்க வேண்டுமா
கவலை இல்லை வந்திடுவீர்
சின்னத் திரையில் கண்டிடலாம்
சிறப்பாய் அறிவை வளர்த்திடலாம்!

- ம. இராஜ்குமார்,
அருப்புக்கோட்டை.





## வா! வா!

மழையே மழையே வா!வா!
மரங்கள் செழிக்க வா!வா!

இலைகள் தழைக்க வா!வா!
இல்லாமை ஒழிய வா!வா!

பசுமை வளர வா!வா!
பஞ்சம் நீங்க வா!வா!

வளமை பொங்க வா!வா!
வறுமை ஒழிய வா!வா!

தொழில்கள் பெருகிட வா!வா!
தொல்லைகள் அகன்றிட வா!வா!

- நா. பிந்து, நெகமம்.



# இந்த ஊரில்தான்...

வேடந்தாங்கல் சுகுணன்

ராமு, கோபால், சண்முகம் மூவரும் அந்த கிணற்றின் கரைக்குப் பக்கத்திலிருந்த பம்புசெட் ஷெட்டின் மீது ஏறி நின்று கிணற்றில் 'டைவ்' அடித்துக் கொண்டிருந்தார்கள். கரையில் நின்று கொண்டிருந்த தியாகு ஆச்சிரியத்துடன் அவர்களுடைய நீச்சல் சாகசங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் கிணற்றில், பத்து கஜம் ஆழத்திற்கு அதாவது முப்பது அடி தண்ணீர் இருந்தது. இந்தப் பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவர்கள் அந்தக் கிணற்றின் அடி ஆழம் வரை சென்று மண் கொண்டு வந்து இவனிடம் காட்டினார்கள்! உயரத்திலிருந்து முழங்கால்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டிக் கொண்டு கிணற்றில் குதிப்பதை 'குந்தும்' என்று விளக்கினார்கள். நேராகக் கைகள் இரண்டையும் சேர்த்து வைத்துக் கொண்டு நின்ற வாக்கில் குதிப்பதை 'நெட்டாங் குத்து' என்றார்கள்.

தியாகுவிற்கு நீச்சல் குளங்களில் நீச்சலடித்த அனுபவம் மட்டும் உண்டு. அதுவும்கூட பல நேரங்களில் ரப்பர் டியூப்பை காற்றடித்து மிதக்கவிட்டு அதன் மீது படுத்தபடி தான் நீச்சல் அடித்திருக்கிறான்.

இந்தக் கிராமத்துச் சிறுவர்களைப் பார்க்கும்போது இங்கே நிறைய குற்றாலீஸ்வரன்கள் இருப்பதை அறிய முடிந்தது. இவர்களுக்குச் சரியான பயிற்சியும், வழிகாட்டுதலும் இருந்தால், இவர்களும் நிறையச் சாதனை படைப்பார்கள் என்பது நிச்சயம்.

தியாகுவின் அப்பா சாம்பமூர்த்திக்கு இந்த பெரியகாட்டுப்பாக்கம் கிராமம்தான் பூர்வீகம். அவர் ரயில்வேயில் வேலை செய்து கொண்டிருந்ததால், டெல்லி, பாம்பே, கல்கத்தா என்று பல்வேறு நகரங்களில் பணிபுரிந்து விட்டு, சென்ற மாதம் தான் சென்னைக்கு மாற்றலாகி வந்திருந்தார். இருபது ஆண்டு கால இடைவெளிக்கு பிறகு இப்போதுதான் அவர் தன் சொந்த ஊருக்கு வந்திருந்தார். சாம்பமூர்த்தியின் பெற்றோர் சின்ன வயதிலேயே இறந்து போனதாலும், அவருக்கென்று உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லாத காரணத்தாலும், அவருக்கு சொந்தக் கிராமத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள வாய்ப்பில்லாமல் போனது. இப்போது, அவருடைய ஒன்று விட்ட அண்ணனின் வீட்டிற்குக் குடும்பத்தோடு வந்திருந்தார் சாம்பமூர்த்தி.

பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த தியாகு இப்போதுதான் முதன்

முதலாகத் தன்னுடைய அப்பா பிறந்த இந்த பூமியைப் பார்க்கிறான். சாம்ப மூர்த்தி கல்கத்தாவில் வேலையில் இருந்த போது தியாகு பிறந்தான்.

தியாகுவிற்கு இந்தக் கிராமத்தின் ஒவ்வொரு அசைவும், இயற்கை எழிலும், இந்த மனிதர்களும் இந்த மனிதர்களின் சுயநலக் கலப்பில்லாத அன்பும் மிகவும் பிடித்துப் போயின.

தியாகுவின் பெரியப்பா மகன் சண்முகமும், அவனுடைய நண்பர்கள் கோபாலும், ராமுவும்தான் இப்போது இவனுக்கு ஆத்ம நண்பர்கள்.

காலை நேரங்களில் தோட்



டத்துக் கிணற்றுக்குச் சென்று குளித்து விட்டு வருவார்கள். மாலை நேரங் களில் காடு, கழனி, வயல், மலை, ஓடை என்று பல்வேறு இடங் களுக்கும் சென்று சுற்றுவார்கள்.


அன்று மாலை தியாகுவை 'மஞ்சா மேட்டுக் கொல்லை' என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றான் சண்முகம். அங்கே நிறையப் பெண்களும் சிறுவர்களும் வேர்க் கடலையை அறுத்துச் சேகரிக்கும் பணி யில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். மண்ணில் ஒரு சிறிய குழி பறித்து அதன் குறுக்கே ஒரு சவுக்குக் கழியை வைத்திருந் தார்கள். அதன் மீது வேர்க்கடலைச் செடியின் வேர் பாகத்தைத் தட்டியவுடன், வேர்க்கடலைகள் எல்லாம் அறுத்துக் கொண்டு குழியில் விழுந்தன.

தியாகுவிற்கு இப் படி வேர்க்கடலையை அறுத்துச் சேகரிப்பது சுவார்சியமாக இருந் தது. அவனும் கொஞ் சம் செடிகளை எடுத்து சவுக்குக் கழியில் தட் டிப் பார்த்தான். அங் கேயிருந்த அனைவரும் வேர்க்கடலையை அள்ளிக் கொடுத்து அவனை சாப்பிடும் படி கேட்டுக் கொண்டார்கள்.

சண்முகம் ஒரு கை நிறைய வேர்க் கட லைச் செடியை வேர்க்கடலையோடு அள் ளிக் கொடுத்து, 'சாப்பிட்டுக் கொண்டே போகலாம் வா' என்றான் தியாகுவிடம்.

நகரத்தில் ஒரு ரூபாய் கொடுத்து வேர்க் கடலை வாங்கினால், எண்ணி பத்து வேர்க்கடலைப் பயிர்கூட இருக்காது. ஆனால் இங்கே வேர்க்கடலையை எவ்வளவு அன்போடு கொடுத்து உண்ணச் சொல்கிறார்கள் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான் தியாகு. காந்தித்





''ஸ்கூலில் மணி அடிச்சதுக்கா ஆசிரியர் உன்னை திட்டினார்?''

''ஆமாம். ஏன்னா நான் அடிச்சது மணி என்கிற மாணவனை ஆச்சே''

— பா. ஜெயக்குமார்

தாத்தாகூட ஆட்டுப் பாலுடன் வேர்க் கடலையைச் சேர்த்து உண்டதாக அவன் படித்திருக்கிறான். இதையெல்லாம் நினைத்துக் கொண்டே வந்தபோது, எதிரில் வெள்ளாடுகளும் செம்மறியாடு களும் சேர்ந்த ஒரு கூட்டத்தை ஓட்டிக் கொண்டு வந்தான் ஒரு சிறுவன்.

''தியாகு ஆட்டுப்பால் குடிச்சுப் பாக்கறியா?'' என்று கேட்டான், சண்முகம்.

''பச்சைப் பாலை அப்படியே குடிக்க லாமா?'' என்றான் தியாகு.

''ஓ, குடிக்கலாமே. ஆட்டுப்பால் ரொம்ப ருசியா இருக்கும், ஆனால் இலேசா வாடையடிக்கும். உடம்புக்கு ரொம்ப நல்லது. குடிச்சுப் பார்'' என்று ஒரு வெள்ளாட்டைப் பிடித்து, குவளை யில் பால் கறந்து அவனிடம் நீட்டினான், சண்முகம்.

தூரத்து வயல்வெளியில் அறு வடைக்குப் பின் சிந்தியிருந்த நெல்மணி களைப் பொறுக்குவதற்காக வாத்துக்களை மேய்த்துக் கொண்டிருந்தார், ஒரு பெரியவர்.

அடுத்த நாள், தியாகுவைப் பனந்தோப் புக்கு அழைத்துச் சென்றான் சண்முகம். அங்கே நல்ல இளசான பனங்காய்களை வெட்டிக் கொடுத்து அதிலுள்ள நுங்கு களை கட்டை விரலால் தோண்டி உறிஞ்சி சாப்பிடுவதற்குக் கற்றுக் கொடுத்தான்.

வெட்டிச் சாப்பிட்டு முடித்த பனங் காய்கள் இரண்டை ஒரு குச்சியால் இணைத்து, அந்த குச்சிக்கு நடுவில் ஒரு இருவாய்க் கிளைக் கொம்பை வைத்து வண்டி ஓட்டிச் சென்றான், ஒரு சிறுவன். இன்னொருவன் ஒற்றைப் பனங்காயில் ஒரு குச்சியைச் செருகி, அந்த பனங்காயை வேகமாய் உருட்டி வண்டியோட்டினான்.

இயற்கையோடு இணைந்து இயற்கைப் பொருள்களை வைத்தே விளையாடும் இந்தச் சிறுவர்கள் வறுமையின் காரண மாகப் படிக்க முடியாமல் போன செய்தி மிகவும் வருத்தமாயிருந்தது, தியாகுவுக்கு.

பனந்தோப்பை விட்டு, சிறிது தூரம் வந்ததும், பக்கத்தில் ஒரு சவுக்குத் தோப் பைப் பார்க்க முடிந்தது. நீண்டு உயர்ந்த சவுக்கு மரங்கள் சீரான இடைவெளி விட்டு நடப்பட்டிருந்தன. சவுக்கு செத்தை முழுவதும் கழிக்கப்பட்டு, ஒவ்வொரு மரத் தின் உச்சியில் மட்டும் அழகான சேவல் கொண்டைமாதிரி சவுக்குத் தழை நீட்டிக் கொண்டிருந்தது. சண்முகமும், தியாகுவும் சவுக்குத் தோப்பின் உள்ளே நுழைந் தார்கள். தோப்பு மரங்களின் உள்ளே சற்று நுழைந்து செல்லும்போது 'ஹோ....ஹோ' எனப் பேரிரைச்சல் கேட்டது. தியாகு தன் அப்பாவுடன் இருந்த பல நகரங்களிலும் இது போன்ற தூய்மையான காற்றை சுவா சித்து மகிழ முடிந்ததில்லை. அரைமணி நேரம் அங்கேயே கழித்துவிட்டு வீட்டிற் குத் திரும்பி நடந்தார்கள்.

வழியில் ஊரின் எல்லையில் சோலை வாழி அம்மன் கோயில் இருந்தது. பெய ருக்குத் தகுந்தாற்போல் அந்தக் கோயிலைச் சுற்றி ஒரு நந்தவனத்தையே உருவாக்கியிருந் தார்கள். நான்கைந்து வேப்ப மரங்களும் நிறையப் பூச் செடிகளும் இருந்தன. வேப்ப மரத்தடியில் சிறுவர்கள் தோளில் பை மாட்டிக் கொண்டு வேப்பங் காய்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

''தியாகு, இதுதான் நம்ம பரம்பரைக்கே குல தெய்வம். நல்லா கும்பிட்டுக்கோ'' என் றான் சண்முகம். உள்ளே மூலஸ்தானத்தில் மேடையில், ஒரு காலை மடக்கியும் ஒரு காலைத் தொங்க விட்டுக் கொண்டும் வடிவமைக்கப்பட்டிருந்தது சோலைவாழி அம்மன் சிலை. நான்கு கைகளில் சூலம், வேலாயுதம், அங்குசம், உடுக்கை என்று கருவிகள் இருந்தன. அம்மனின் அழகான அமைதியான முகம் தெளிவையும் சாந்தத்தையும் கொடுத்தது.

கோயிலைப் பார்த்துவிட்டு வீடு திரும் பும்போது நிறையக் குடிசை வீடுகளைப் பார்த்தான். ஒவ்வொரு வீட்டின் வாசலும்

திண்ணையும் சாணத்தால் மெழுகப்பட்டு, வாசலில் பளிச்செனக் கோலமிடப்பட்டிருந்தது. வீட்டைச் சுற்றிலும் கடலாத்தி செடிகள் நடப்பட்டு, அவை கிட்டி பிடிக்கப்பட்டு காம்பௌண்ட் சுவர் போலவே அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

கிராமத்து மக்களிடம் கலப்படமில்லாத அன்பும், கடுமையான உழைப்பும் இருந்தது. ஆனால், இவர்களில் நிறையப் பேர் படிக்காமல் இருந்ததுதான் வருத்தமான விஷயம். அறிவொளி இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் இரவுப் பள்ளிகளில் சேர்ந்து படித்துப் பயன் பெறும்படி இவர்களை வலியுறுத்தினான் தியாகு.

கோடை விடுமுறையாக இருந்ததால், ஒரு மாத காலம், இந்த கிராமத்திலேயே தியாகுவால் தங்கியிருக்க முடிந்தது.

**வீ**ட்டிற்குள் நுழையும்போதே அப்பாவின் குரல் கேட்டது. விடுமுறை முடிந்து அவனை அழைத்துப் போக வந்திருந்தார், அப்பா.

அப்பா பெரியப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தார். "என் மகனை பெரிய டாக்டருக்குப் படிக்க வச்சு, வெளி நாட்டுக்கு அனுப்பி கைநிறையச் சம்பாதிக்க வைக்கனும்னு ஆசை" என்றார் அப்பா பெரியப்பாவிடம்.

தியாகுவின் தாத்தா, தன் பேரக் குழந்தைக்கு என ஒரு ஏக்கர் நிலத்தை உயில் எழுதி வைத்திருந்தார். ரோட்டு ஓரத்தில் இன்னும் அந்த நிலம் தியாகுவிற்காகத் தவம் கிடந்தது.

பெரியம்மாவிடமும், பெரியப்பாவிடமும், சண்முகத்திடமும் கண்ணீர் மல்க விடை பெற்றான், தியாகு.

தியாகுவின் மனதிற்குள் உரத்த குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. 'நான் டாக்டருக்குப் படித்துவிட்டு வந்து இந்த ஊரில்தான் மருத்துவசேவை செய்வேன். என்னுடைய படிப்பும், திறமையும் இந்திய மண்ணுக்குத்தான் பயன்பட வேண்டும். அதுவும் என் மூதாதையர் வாழ்ந்த இந்த ஊருக்குத்தான் என் சேவை மிகவும் தேவை'

இதை அவன் நிறைவேற்றக் கூடியவன்தான். இந்த மண்ணின் மைந்தனல்லவா தியாகு.


---

# குரங்குக்கு 3-வது இடம்!

**கு**ரங்குகள் தேர்தலில் போட்டியிடலாமா என்ற கேள்விக்குத் தெளிவான பதில் தர யாராலும் முடியாது. ஆனால், நகர மேயர் தேர்தலில் ஒரு சிம்பன்சி குரங்கு போட்டியிட்ட செய்தி திகைப் பளிக்கக் கூடியதாகும். பிரேசில் நகரின் மிகவும் செல்லப் பிராணியான டியோ என்ற சிம்பன்சி குரங்கு நீரிழிவு நோயால், போன வருடம் கிறிஸ்துமஸுக்கு சில தினங்களுக்கு முன் இறந்து போனது. அதற்கு வயது 34. ரியோடி ஜெனீரோவில் உள்ள மிருகக் காட்சி சாலையில் எல்லோராலும் மிகவும் விரும்பிப் பார்க்கப் படும் செல்லப் பிராணியாக அது இருந்தது. அந்நகரின் 1988-ஆம் வருடம் நடந்த மேயர் தேர்தலில் டியோ ஒரு வேட்பாளராக நிறுத்தப்படும் அளவிற்குப் புகழ் பெற்றது இந்த சிம்பன்சி. ஆனால் டியோவினால் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. மூன்றாவது இடம்தான் அதற்குக் கிடைத்தது.




— ஜி. இந்திரா



# எறும்பை மதித்த எருமை!

எருமை ஒன்று மரநிழலில் படுத்துக் கொண்டு இருந்தது. எறும்பு அதன் காதுக்குப் பக்கத்தில் சென்றது. "பெரியப்பா!" என்று அழைத்தது. எருமை திரும்பிப் பார்த்தது. "நானா உனக்குப் பெரியப்பா?" என்று கோபத்தோடு கேட்டது.

"நான் சின்ன உருவம். நீங்கள் பெரிய உருவம். உங்களைப் பெரியப்பா என்று அழைப்பது எனக்குப் பெருமை அல்லவா?" என்று கேட்டது எறும்பு.

"சீ! சீ! உனக்கு வேண்டுமானால் அது பெருமையாக இருக்கலாம். ஆனால் எனக்கு அது அவமானமாச்சே! நான் உனக்குப் பெரியப்பா இல்லை! போபோ!" என்று துரத்தியது எருமை. எறும்பு ஓடி விட்டது.

ஆடு "மே! மே!" என்று கத்திக் கொண்டே வந்தது. எருமையைப் பார்த்து, "உங்கள் நலம் விசாரிக்கிறேன்!" என்று சொல்லியது.

உடனே எருமை, "ங்கொய்ங்..! என்று கத்தியது. ஆட்டை மரியாதையாக அழைத்தது. "உனக்கு என் வாழ்த்துக்கள்!" என்று சொல்லியது. ஆடு மகிழ்ச்சியோடு நடந்தது.

ஆடு போன கையோடு ஒரு நாய் வாலை ஆட்டிக் கொண்டே வந்தது. "ஏன் என்னைப் பார்த்து வாலை ஆட்டுகிறாய்? என் வாழ்த்து உனக்கும் வேண்டுமா? வாங்கிக் கொள். நூறாண்டுகள் வாலை ஆட்டிக் கொண்டே இரு!" என்று வாழ்த்தியது எருமை. நாய்க்குப் பெருமை தாங்கவில்லை.


பின்னாலேயே வந்த கோழி "கொக்கரக்கோ! கொக்கரக்கோ!" என்று கூவிக் கொண்டே வந்தது. எருமை பார்த்தது. "இது என்ன சத்தம்?" ஏன் இப்படிக் கூவறே?" என்று கேட்டது? "எல்லாம் உங்களுக்காகத்தான். என் மரியாதையை எப்படித் தெரிவிப்பது? கொஞ்சம் இருங்க. உங்களுக்காக நான் பாடுகிறேன்!" என்று சொன்னது கோழி.

உடனே எருமை தன் வாலை உயர்த்தியது. கோழி பயந்து, "என்னை அடிக்கப் போகிறாயா?" என்று கேட்டது. "நானா உன்னை அடிப்பேன்? உன்னைத் தட்டிக் கொடுக்கப் போகிறேன்!" என்று சொன்னது. கோழி மகிழ்ச்சியுடன் ஓடியது.

எல்லோரும் தன்னைத் தேடி வருவதைப் பார்த்து மகிழ்ந்தது எருமை. அதற்குத் தலை கொள்ளாத பெருமை. வெயில் ஏற ஏற வெப்பத்தின் கொடுமைக்குப் பயந்து குட்டையில் விழுந்து புரண்டது அது; சேற்றில் அழுந்திக் கிடந்தது. ஒரு மணிக்குப் பிறகு மெல்ல எழுந்தது. மரத்தடியில் வந்து படுத்தது. உடம்பு முழுவதும் சேறு. பார்க்கச் சகிக்கவில்லை!

ஆடு வந்தது. பார்த்துத் திகைத்தது. பேசவில்லை. நாய் வந்தது. பார்த்துத் திரும்பி விட்டது. பேசவில்லை. கோழி வந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டு ஓடியது. பேசவே இல்லை. இவற்றைப் பார்த்து எருமைக்கு வருத்தமாக இருந்தது. உடம்பு முழுவதும் சேறு காய்ந்து விட்டது. அப்போது எறும்பு வந்தது. எருமையின் முதுகில் ஏறியது. "உன் முதுகின் மேல் ஒட்டியுள்ள மண்ணைத் தட்டப் போகிறேன்!" என்றது. எருமை மகிழ்ந்தது. "இனிமேல் நான்தான் உனக்குப் பெரியப்பா!" என்று தானே வலியச் சொன்னது. எறும்புக்குப் பெருமையாக இருந்தது.

**டாக்டர் ஆலந்தூர்**
**கோ. மோகனரங்கன்**




# எங்கள் ஊரில் நடந்தது!

## என்ன செய்தாலும்

பதினோறாம் வகுப்பில் படித்துக் கொண்டு இருக்கிறேன். எங்கள் வகுப்பில் 50 பேர் படிக்கிறோம். வகுப்பில் ஆசிரியர் இல்லாத போது மாணவர்கள், இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஆசிரியர் வந்து கடிந்து கொண்டு "இனிமே என்ன செய்தாலும் என்னைக் கேட்டுவிட்டுத்தான் செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டு அமர்ந்து கொண்டார். உடனே ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து நின்று, "சார் கொசு கடிக்கிறது. அடிக்கட்டுமா? வலிக்கிறது" என்று கேட்டான்!

— எம். ரவிகுமார், வெள்ளை கிராமம்.



## விளக்கம் தெரியாமல்....

ஈஸ்வர ஆண்டு தமிழ் வருடப் பிறப்புக்கு வீட்டில் சுவாமி கும்பிட்டோம். சாம்பிராணி போட்டுவிட்டு ஊதுபத்தி ஏற்றினேன். சுடராக எரியவே அதை அணைக்கப் போனேன். அப்போது அருகே நின்றிருந்த எங்கள் வீட்டுப் பொடிசு அந்த பத்திகளை என்னிடமிருந்து வாங்கி, சாம்பிராணிப் புகையில் காட்டியது. என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று இருந்தேன். சாம்பிராணிப் புகையில் பத்தி எரிவது நின்று புகைய ஆரம்பித்து விட்டது! புகையில் உள்ள கரியமில வாயுவால் பத்தி எரிய ஆக்ஸிஜன் கிடைக்காமல் அணைந்து விட்டது என்பதைப் பிறகு தான் உணர்ந்தேன். அது சரி, அது எப்படி சின்னதுக்குத் தெரியும்? ஆச்



சரியமாக அவனிடமே கேட்டேன். விளக்கத் தெரியாமல் "அப்படித்தான்" என்றான்.

— த. சாந்தி, மன்னார்குடி.

## மீன்களின் *Food Ball*

நாங்கள் காலை பள்ளிக் கூடம் விட்டுவிட்டு சத்துணவுக் கூடத்தில் சத்துணவு வாங்கிக் கொண்டு, சாப்பிடுவதற்



காகக் குளத்திற்குச் சென்றோம். குளத்தில் நிறைய மீன்கள். எங்களில் ஒருவன் மீன்களுக்குக் காயுடன் கூடிய சத்துணவைக் கொஞ்சம் போட்டான். மீன்கள் எல்லாவற்றையும் தின்று விட்டு, காயை மட்டும் கொத்திக் கொண்டும் தள்ளிக் கொண்டும் சென்றன. இதைப் பார்த்த ஒருவன் மீன்கள் எல்லாம் Food Ball விளையாடுகின்றன என்றானே பார்க்கலாம்!

— ந. துரை, வெள்ளையாம்பட்டு.

## பாரதியைப் பிடிக்கும்!

ஆசிரியர் - பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பெருமைகளையெல்லாம் கூறினார். இறுதியில் ஒரு மாணவனைப் பார்த்து, "பாரதியார் பாரதிதாசன் இருவரில் யாரைப் பிடிக்கும்?" என்று கேட்டார். குறும்புக்கார மாணவனாகிய அவன், "பாரதியார் காலையில் மட்டும்தான் படிக்க வேண்டும் என்றார். பாரதிதாசனோ எப்பொழுதும் படிக்கச் சொல்கிறார். ஆகையால் எனக்கு பாரதியாரைத்தான் பிடிக்கும்," என்றானே பார்க்கலாம்!

— நடேசன் துரை, பனைமலை அஞ்சல்.




## ஓல்டு வேண்டாம்!

ஒரு நாள் நானும் எனது நண்பன் கார்த்திக்கும் பொருட்கள் வாங்கி வரக் கடைக்குச் சென்றிருந்தோம். கார்த்திக்



குளியல் சோப்பான "Lifebouy Gold" என்ற சோப்பை வாங்கினான். அந்த சோப்பின் வண்ண உறையில் இருந்த ஜி 'G' என்ற எழுத்து அழிந்து விட்டிருந்தது. அழிந்த எழுத்தை நீக்கி அந்த சோப்பின் பெயரைப் படித்த என் நண்பன் 'Lifebouy Old' எங்களுக்கு வேண்டாம் என்று கூறினான் விளையாட்டாக. உடனே கடையில் சாமான்கள் வாங்க வந்தவர்களும் மற்றும் கடைக்காரர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

— கே. மணிகண்டன், துத்திப்பட்டு.



## கை கொடுடா!

**எ**ன் அக்கா பையன் மிகவும் சுட்டி. ஒருமுறை என் மாமா ஊரிலிருந்து வந்திருந்தார். அவனிடம் கைகுலுக்கச் சொல்லிக் கையை நீட்டினார். அவன் பதிலுக்குக் கையை நீட்டாமல் நின்றிருந்தான். அக்கா 'கையைக் குடுடா....' என்று கூற அவன் 'மாட்டேன்' என்றான். "ஏன்?" என்று கேட்டபோது, "எனக்கு இருக்கறது இரண்டு கைதான்... அதுல ஒண்ணை அவருகிட்ட குடுக்க மாட்டேன்" என்றானே பார்க்கலாம்! அதிலிருந்து அவனிடம் நாங்கள் அடிக்கடி 'கைகுடுடா' என்று கூறிக் கேலி செய்கிறோம்.

**— செ. சங்கர், பாணாம்பட்டு.**

## பயம்!

**ச**ம்பத்தில் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்றிருந்த போது வைத்தியத்திற்காக ஒரு ஐந்து வயதுச் சிறுவனுடன் ஒருவர் வந்திருந்தார். சிறுவன் டாக்டர் ஊசி போட்டுவிடுவாரோ என்று பயந்தபடி இருந்தான்.

அவனைச் சமாதானம் செய்ய "டாக்டர் ஊசி போடுவார். மாத்திரையும் கொடுப்பார். ஆனா ஊசி போடும் போதுதான் கொஞ்சம் வலிக்கும் உடனே சரியாயிடும். அதே மாதிரி மாத்திரை லேசா கசக்கும். உடனே அதை நீ விழுங்கிட்டேன்னா, எல்லாம் சரியாயிடும்" என்றார்.

"மொதல்லயே பையன் பயப்பட்டுக்



கிட்டு இருக்கான். இப்படிச் சொன்னா ரொம்பல்ல பயப்படுவான்?" என்றேன்.

அவர் சொன்ன விளக்கம் வித்தியாசமாக இருந்தது!


"அதுவா, நாம சமாதானத்துக்காகப் பொய் சொன்னாலும் அவன் நம்பப் போறதில்லை. வலிக்காது, கசக்காதுன்னு சொல்லிட்டு பிறகு ஊசி வலிச்சாலும் மாத்திரை கசந்தாலும் அவனுக்கு அது அதிகமாத் தெரியும். அதனாலே இப்போ சொன்ன மாதிரியே சொல்லிட்டா, வலியையும் கசப்பையும் ஒத்துக்கிறதுக்கு அவன் ஓரளவு தயாராகிடுவான்".

அவர் சொன்னதிலும் உண்மை இருக்கிறது இல்லையா?

**— ஆர்.ஆர். பூபதி, கன்னிலாடி அஞ்சல்.**

## இறங்கித் தள்ளுங்க!

**நா**ங்கள் மாணவர்கள் எல்லாம் ஒரு முறை அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் தனியார் பேருந்து ஒன்றில் சுற்றுலா சென்றோம். கொடைக்கானலில் உள்ள ஏரியைப் பார்த்த நாங்கள் படகில் செல்ல விரும்பினோம். பஸ் டிரைவர் "நானே படகைச் செலுத்துகின்றேன்" என்றார். செலவு குறைகிறதே என்று எண்ணி சம்ம



தித்தோம். படகில் சென்றபடி இயற்கை யழகை ரசித்துக் கொண்டிருந்தபோது இயந்திரக் கோளாறு ஏற்பட்டு படகு நடு ஏரியில் நின்று விட்டது. டிரைவரோ "என்ன! இப்படி கவலைப்பட்டுக்கிட்டு உட்கார்ந்திருந்தா எப்படிங்க? எல்லோரும் கீழே இறங்கித் தள்ளுங்க! படகு ஸ்டார்ட் ஆயிடும்" என்றாரே பார்க்கலாம்.

அந்தக் கவலையிலும் கஷ்டப்பட்டுச் சிரித்தோம் என்பதைக் கூற வேண்டுமா?

— செல்வராஜ், குருசாமிபாளையம்.



## ஜிம்மிக்கி போடுங்க!

எனது சிறிய தம்பிக்கு வயது மூன்றரை ஆகிறது. அவனது மழலை கலந்த பேச்சினை நாங்கள் எப்போதும் ரசிப்போம். ஒருநாள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது தம்பி திடீரென்று "அம்மா ஜிமிக்குப் போடுங்க" என்றான். உடனே அம்மா காதில் போடுகின்ற ஜிமிக்கி (தோடு) என்று நினைத்துக் கொண்டு, "ஜிமிக்கி பீரோவில் இருக்கு. அப்புறம் எடுத்து போட்டுக் கொள்கிறேன்" என்று கூறினார்கள். ஆனால் தம்பி மீண்டும் வாசலைக் காட்டி, "ஜிம்மிக்கி போடுங்கம்மா", என்று அழ ஆரம்பித்தான். நாங்கள் புரியாமல் வாசலுக்குச் சென்று பார்த்தால் அங்கு பக்கத்து வீட்டு நாய் ஜிம்மி நின்று கொண்டிருந்தது. அதற்கு சாப்பாடு போடத்தான் தம்பி சொல்லியிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டதும் வீட்டில் சிரிப்பலை எதிரொலித்தது.



— தினை. அன்புதேவன்,
காட்டுமன்னார்கோயில்.

## பொய் சொல்றியா!

அம்மாவும், அப்பாவும் ஊருக்குச் சென்றிருந்ததால், தேர்வுக்கு என் பாட்டி வீட்டில் தங்கிப் படித்து வந்தேன். அன்று, என் பாட்டி என்னிடம், "ஏண்டா! மணி (செல்லப் பெயர்) இன்னிக்கு என்ன பரீட்சை?" என்று கேட்டார். நான், "அறிவியல் பரீட்சை" பாட்டி என்றேன். அன்றைய தினமே, என் அம்மாவும், அப்பாவும் ஊரிலிருந்து வந்து விட்டனர். அவர்களும் என்னிடம், "இன்னிக்கு என்னடா பரீட்சை?" என்றனர். நான் அதற்கு, "சயின்ஸ் பரீட்சை" என்றேன். உடனே,



சமையல் செய்து கொண்டிருந்த பாட்டி ஓடி வந்து, "ஏண்டா! எங்கிட்டே ஒன்றும் அப்பாவிடம் ஒன்றுமா சொல்றே?" என்று கேட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. விழித்தேன்.

"என்ன பரீட்சைன்னு நான் கேட்டப்போ சயன்ஸ்ன்னு சொன்னே! இப்ப உங்கப்பா கேட்டதுக்கு அறிவியல்னு சொல்றியே! இது என்ன பொல்லாத் தனம்?" என்று வினாவினார் பாட்டி. பாவம் பாட்டி. ஆங்கில அறிவு இல்லாதவர் சயன்ஸும் அறிவியலும் ஒன்றே என்பதையும், நான் பாட்டியிடம் பொய் சொல்லி ஏமாற்ற முயற்சிக்கவில்லை என்பதையும் புரியவைத்து விளக்குவதற்குள் நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்!

— ச. மகேஷ், ஈரோடு - 2.

# அக்கா எழுதிய கவிதை!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



## காட்சி – 1

(பள்ளி மரத்தடி)

**பரத் :** என்ன தீப், உன்னைத்தான் கூப்பிட்டுக்கிட்டு ஓடி வரேன்... காதுல விழல்லே? என்ன யோசனை?

**தீப் :** ம்... வந்து... ஒரு கவிதைப் போட்டியிலே கலந்துக்கறதா இருக்கேன்... அதான்...

**பரத் :** என்னது? கவிதைப் போட்டியா? நீ கலந்துக்கப் போறியா? (பலமாகச் சிரித்து விட்டு) அப்போ குதிரைக்குக் கொம்பு முளைக்கப் போறதுன்னு சொல்லு!

**தீப் :** என்னது குதிரைக்குக் கொம்பா?

**பரத் :** ம்! குதிரைக்குக் கொம்பு முளைக்காது இல்லே?

**தீப் :** ஆமாம்!

**பரத் :** அது போலத்தான் நீ கவிதை எழுத ஆசைப்படறதும், போட்டியிலே கலந்துக்கறதும்! உனக்காவது, பரிசு கிடைக்கறதாவது! டாட்டா!

**தீப் :** ம்! கவிதை எப்படி எழுதறது? பேசாம வேற யாரை யாவது எழுதித் தரச் சொன்னா என்ன? ஹூம்... அதுதான் சரி, அதோ மது வரா... அவளைக் கேட்டுப் பார்ப்போம்.

**மது :** என்ன தீப்?

**தீப் :** 'கோடை விடுமுறை'யைப் பத்தி ஒரு கவிதைப் போட்டி நடக்கப் போறது... அதுலே நானும் கலந்துக்கப் போறேன்.

**மது :** என் வாழ்த்துக்கள்!

**தீப் :** ஆனா, நீதான் எனக்கு ஒரு கவிதை எழுதித் தரணும். சும்மா பத்து வரி இருந்தா போதும்.

**மது :** என்ன! உனக்காக நான் எழுதித் தரணுமா? தீப், நீயே எழுத முயற்சி பண்ணு... கட்டாயம் வரும்! நாலு கவிதைப் புத்தகங்கப் படிச்சுப் பாரு, ஆனா 'காப்பி' மட்டும் பண்ணிடாதே.

**தீப் :** அக்கா இந்த ஒரே ஒரு தடவை மட்டும்...

**மது :** அது சரியில்லை தீப். நீயா முயற்சி செய்து பார்! பரிசு கிடைக்காட்டாலும் பரவாயில்லை! திறமை வளரணும்னா இதுதான் சரியான வழி! நான் வரேன்!

**தீப் :** மது அக்கா, நான் உங்கிட்டே

கவிதை கேட்டதை என் அக்கா சத்யா இட்டே மட்டும் சொல்லிடாதே! அட! நாம அதிர்ஷ்டசாலிதான், அதோ நூர் அக்கா வரா, அவளைக் கேட்டுப் பாப் போம்! வணக்கம் நூர் அக்கா!

**நூர்** : வணக்கம்!

**தீப்** : நூர்! எனக்கு "கோடை விடு முறை"யைப் பத்தி ஒரு கவிதை வேணும்! ஒரு போட்டியிலே கலந்துக்கப் போறேன்!

**நூர்** : கலந்துக்க... ஆனா என்னை ஏன் கேக்கறே? கோடை விடுமுறைக்கு எங்கே போயிருந்தே? எப்படி அனுபவிச்சே? என் னென்ன ஊர்கள் பாத்தே? இதையெல் லாம் வச்சு எழுத வேண்டியதுதானே?

**தீப்** : எழுதவராது போலிருக்கே...

**நூர்** : இது சோம்பேறிகளோட பதில்! இதோ பார்! இப்படி மத்தவங்க எழுதிக் கொடுத்து நீ பரிசு வாங்கறது, மத்தவங்க முதுகிலே ஏறி சவாரி செய்யற மாதிரி! நான் வரேன்!

**தீப்** : ஆனா இப்படி நான் கவிதை கேட்டதை என் அக்காகிட்டே மட்டும் தயவுசெய்து சொல்லிடாதே!

## காட்சி – 2

**சத்யா** : என்ன தீப், என்ன தலை சொறியல், கையை எடு!

**தீப்** : வர செவ்வாய்க்கிழமை காலை யிலே எங்க பள்ளிக்கூடத்திலே ஒரு கவி தைப் போட்டி... "கோடை விடுமுறை" – இதான் தலைப்பு! நானும் கலந்துக்கப் போறேன்!

**சத்யா** : ம்! "கோடை விடுமுறை" பத்தி கவிதையா...? சரி! கலந்துக்க! ஆனா என்னை எழுதித் தரும்படியா கேக்காதே... நம்ம கால்லேயே நாம நடக்கப் பழகணும்! நானும் வர புதன் கிழமை ஒரு கவிதைப் போட்டியிலே கலந்துக்கப் போறேன்!

**தீப்** : அப்படியா?

**சத்யா** : ஆமாம்! அதுக்காகத்தான் இப்போ எழுதிக்கிட்டிருக்கேன். தீப், உனக் கொரு இனிப்பான செய்தியும் இருக்கு!

**தீப்** : என்னது?

**சத்யா** : வியாழக்கிழமை உன்னோட பிறந்த நாள்! அன்னிக்கு உனக்கு நான் ஒரு பரிசு தரப் போறேன்!



**தீப்** : என்ன பரிசு?

**சத்யா** : அது எனக்கே தெரியாது. நீ இப்ப கவிதை எழுதப் பழகு. எழுதினதை எங்கிட்டே காண்பி! எப்படி இருந்தா நல்லாயிருக்கும்னு சொல்லித் தரேன்.

## காட்சி – 3

**தீப்** : அக்கா... இதோ பரிசு வாங்கிட் டேன்! கவிதைப் போட்டியிலே முதல்



பரிசு வாங்கிட்டேன்!

*சத்யா* : அப்படியா? பாராட்டுகள்! வாழ்த்துகள்! ஆமாம், நீ எழுதின கவிதையை எங்கிட்டே நீ காண்பிக்கக் கூட இல்லையே! என்ன எழுதினே! சொல்லிக் காட்டு பார்க்கலாம்?

*தீப்* : வந்து... வந்து...

*சத்யா* : இதான் கவிதையா...? சரி படிச்சாவது காட்டு!

*தீப்* : வந்து... அந்தக் கவிதை எழுதின பேப்பரை எங்கேயோ தொலைச்சுட்டேன்!

*சத்யா* : சரி; நாளைய கவிதைப் போட்டிக்கு நான் என்னைத் தயார் பண்ணிக்கணும்... எழுதினதை படிச்சுப் பாக்கணும்! அடேடே! தீப்! இந்த மேஜை மேலே நான் எழுதின கவிதையோட ரெண்டு நகல் இருந்தது... ஒண்ணு காணோம்! பாத்தியா?

*தீப்* : இல்லையே. வேலை இருக்கு. (போகிறான்)





**"உங்க வீட்டுக்குள்ளே வந்ததும் உங்க பையன் வாங்க சார்னு வரவேற்றான்!"**

**"அப்படியா! எம் பையனாச்சே. அதெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கேன்ல?"**

**"உடனே என்ன சார் வெறுங்கையை வீசிக்கிட்டு வந்திருக்கீங்க? ஒன்னும் வாங்கிட்டு வரல்லையான்னும் கேட்டான்!"**

**– சிறுவயல் செபமணி**

## காட்சி – 4

நடுவர் : அன்பு மாணவ மணிகளே! நேற்று அருகாமையிலுள்ள ஒரு பள்ளியில் நடந்த கவிதைப் போட்டிக்கு நடுவராக இருந்தேன். அங்கும் இதே "கோடை விடுமுறை" என்ற தலைப்பிலேயே போட்டி நடந்தது! இப்பொழுது நடந்து முடிந்த போட்டியும் அதே தலைப்பில் தான். நீங்கள் அனைவரும் அருமையான முறையில் உங்கள் கவிதைகளைப் படித்தீர்கள்! ஒருசிலர் மட்டும் மற்றவர் எழுதிய கவிதைகளைக் காப்பியடித்து படித்திருக்கிறார்கள். இது தவறான செயல்! இப்பொழுது போட்டியின் முடிவுகளைச் சொல்கிறேன். முதல் பரிசு... ஷீலா (கரவொலி) நூறு ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள்! இரண்டாம் பரிசு.... ரமா! 50 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள்! மூன்றாம் பரிசு விமலா! 25 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள்! (கரவொலி)... நன்றி! ஜெய் ஹிந்த்!

## காட்சி – 5

*(சத்யா அழுதபடி நடக்கிறாள்)*

**மது** : ஏய் சத்யா! என்ன இது? அழவே ஆரம்பிச்சுட்டியா?

**நூர்** : அழாதே சத்யா! உண்மையிலே உன் கவிதைக்குத்தான் எல்லாரும் நல்லா கைதட்டினாங்க! பிரமாதமா ரசிச்சாங்க! எங்களுக்கும் தெரியும்.

**சத்யா** : அப்படியிருந்தும் எனக்கு ஏன் நூர் பரிசு கிடைக்கல்லே?

**நடுவர்** : (பின்னால் வந்தபடி) அதுக்குக் காரணம் இருக்கும்மா!

**மது** : யார்! நடுவர் சாரா? வணக்கம் சார்!

**நடுவர்** : வணக்கம்மா!

**நூர்** : சார்; சத்யா கவிதைக்கு மூணாவது பரிசு கூடக் கிடைக்கல்லையே சார்!

**சத்யா** : அவ்வளவு மோசமாவா இருந்தது என் கவிதை?

**நடுவர்** : இல்லேம்மா, கவிதை ரொம்ப ரொம்ப நல்லாத்தான் இருந்தது. ஆனா அது நீயே எழுதின கவிதையா இல்லேயேம்மா!...

**சத்யா** : (திடுக்கிட்டு) சார்! அது நானே எழுதின கவிதைதான் சார்! இதுக்கு முன்னால பல கவிதைப் போட்டிகள்ளேயும் கலந்துக்கிட்டு பரிசு வாங்கியிருக்கேன் சார்! இந்தப் போட்டியிலேயும் முதல் பரிசா நூறு ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் கிடைக்கும்; அதை என் தம்பி திப்புக்கு பிறந்த நாள் பரிசா கொடுக்கணும்னு ரொம்ப ஆசையா இருந்தேன் சார்!

**நடுவர்** : (திகைத்து) என்னது! உன் தம்பி பேர் 'திப்'பா? எந்த பள்ளிக்கூடம்?

**சத்யா** : நேரு பள்ளிக்கூடம் சார்!

**நடுவர்** : அப்படியானா நேத்து கவிதைப் போட்டியிலே கலந்துக்கிட்டு முதல் பரிசு வாங்கின திப் உன் தம்பியா?

**சத்யா** : ஆமாம் சார்!

**நடுவர்** : சத்யா, நீ இப்போ படிச்ச இதே கவிதையைத்தான் 'திப்'பும் நேத்து அடிமாறாம படிச்சான்!

**நூர்** : சார், இப்பத்தான் சார் புரியறது! சத்யா எழுதி வச்சிருந்த கவிதை இவங்கிட்டே எப்படியோ கிடைச்சிருக்கு! ரெண்டு போட்டிகளுக்கும் தலைப்பும் ஒண்ணா இருக்கவே, சத்யா கவிதையை அப்படியே படிச்சு பரிசு வாங்கியிருக்கான்.

**நடுவர்** : சத்யா, நீ உனக்குக் கிடைக்கப் போற பரிசை உன் தம்பிக்குப் பிறந்த நாள் பரிசா கொடுக்க ஆசையாயிருந்தே... ஆனா அவன் உன் கவிதையையே திருடிப் படிச்சு பரிசு வாங்கிட்டான்!

**சத்யா** : என் தம்பி இப்படி செய்வான்னு நான் நினைக்கல்லே சார்! என் கவிதையோட ஒரு நகல் எப்படியோ அவன் கண்ணிலே பட்டிருக்கு! அந்த நகலை நான் தேடிக்கிட்டிருந்த போது கூட அவன் பார்த்தான். எதுவும் சொல்லல்லே...

**நடுவர்** : சத்யா, எப்படியோ உனக்கு எதிரா போட்டி முடிவு சொல்லும்படியாயிட்டது... என்னை மன்னிச்சுடு!

**தீப்** : (பின்னால் வந்தபடி) சார்... நீங்க எல்லாரும் என்னைத்தான் மன்னிக்கணும்!

**நடுவர்** : ஓ! கவிதையைத் திருடிய கள்ளனா?

**தீப்**: ஆமாம் சார்! எப்படியாவது பரிசு வாங்கணும்கிற பேராசையிலே, அக்காவோட கவிதையைத் திருடி எடுத்துப் படிச்சு பரிசும் வாங்கிட்டேன்... சத்யா அக்கா... உனக்கு ஏற்பட்டிருக்கிற அவமானத்திற்கும், தோல்விக்கும் நான்தான் காரணம். உனக்குக் கிடைக்கவிருந்த பரிசை என்னோட பிறந்த நாள் பரிசா தர நினைச்ச... ஆனா நான் உன்னை வேதனைப்படுத்திட்டேன்... மன்னிச்சுடு சத்யா.

**நடுவர்** : தீப்! நீ எனக்கும் அவமானத்தை உண்டுபண்ணிட்டே, சத்யா படிச்ச கவிதைக்குத்தான் பலமான பாராட்டுதல்! ஆனா நான் அவளுக்குச் சரியான மதிப்பெண் போடல்லேன்னு எல்லாப் பிள்ளைகளுக்கும் என் மேலே கோபம்!

**தீப்** : மன்னிச்சுடுங்க சார்! இதோ எங்க வீடும் வந்தாச்சு! உள்ளே வந்து எனக்குக் கிடைச்ச பரிசை உங்க கையால அக்கா சத்யாவுக்கு கொடுத்துட்டு போங்க சார்! நானே ஒரு போட்டோவும் எடுத்துடறேன்!

**நடுவர்** : பலே பலே நல்ல 'ஐடியா' வாங்க! வாங்க!

# புதுவையில் பொலிந்த சிறுவர் இலக்கிய விழா!

சிறுவர் இலக்கியத்தை வளர்க்கவும், சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களை ஊக்குவிக்கவும் சீரிய தொண்டாற்றி வரும் புதுவைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் தனது 3-வது ஆண்டு விழாவை அண்மையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியுள்ளது. புதுவை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு. ப.யூ.அய்யூப் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்த விழாவுக்கு சங்கத் தலைவர் கவிஞர் அரிமதி தென்னகன் அவர்கள் தலைமை தாங்கினார். தமிழக அரசின் குழந்தை இலக்கியப் பரிசைப் பெற்றமைக்காக பேராசிரியர் எ.ஜோதி அவர்களுக்கு நினைவுப் பரிசும், கவிஞர் மதிஒளி, முகம்மது ஆரிப் மியான் ஆகியோருக்கு விருதும், சங்கம் நடத்திய சிறு கதைப் போட்டியில் பரிசு பெற்றோக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. பேராசிரியர் ஜோதி அவர்களின் குழந்தைகளுக்கான புதிய நூல்களும் வெளியிடப்பட்டன. கல்வே அரசு மேல் நிலைப் பள்ளியில், திரு கே. பார்த்தசாரதி, திரு ஆனந்தரங்க இரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் ஏராளமான இலக்கிய அன்பர்களும் குழந்தை எழுத்தாளர்களும் கலந்து கொண்டு விழாவைப் பொலிவு பெறச் செய்தனர். புதுவை குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பணியை நாமும் பாராட்டுவோம்!



# கொதிக்கிறதா பாருங்க?

அந்தமான் தீவுகளுக்கு வந்திருந்த இரண்டு சிறுவர்கள் மழையில் சிக்கித் திரும்பும்போது வழி தவறி விட்டனர்.

அடர்ந்த காட்டினுள் இருப்பதை அப்போதுதான் அவர்கள் உணர்ந்தனர். எங்கும் இருள் பரந்திருந்தது. இருவரும் பயந்து கடவுளை மனமுருகி வேண்டினர்.

சிறிது தூரம் தட்டுத் தடுமாறி நடந்து வந்தவர்களின் கண்களில் ஒரு சிறிய குடிசை தென்பட்டது. இருவரும் உள்ளே நுழைந்து மறைவான ஓரிடத்தில் ஒளிந்து கொண்டனர்.

சற்று நேரத்திற்கெல்லாம் மேகம் போன்ற கரிய நிறமுடைய ஒருவனும், அவனுடன் ஒல்லியான விகாரமுகமுடைய இன்னொருவனும் அக்குடிசையினுள் நுழைந்தனர்.

"இங்கே இருக்கும் பொருட்கள் எல்லாம் கலைந்திருக்கு. தரையில் நான்கு கால்களின் தடயம் பதிந்திருக்கு. இரண்டு சிறுவர்களில் ஒருவனை நாளை காலை வெயில் வருவதற்கு முன் கொதிக்கும் நீரில் போட்டுப் பக்குவமாய்ச் சமைத்துச் சாப்பிடப் போகிறேன். உனக்கு அவன் இதயத்தைத் தருகிறேன்"- என்று குண்டாக இருப்பவன் அருகிலிருந்தவனிடம் கூறினான்.

இந்தப் பேச்சு ஒளிந்திருந்த இரு சிறுவர்களின் காதிலும் கேட்டது.

"கடவுளே! எங்கள் இருவரையும் காப்பாற்று. உள்ளே இருக்கும் இரண்டு பேரும் மனிதர்களை உண்ணும் காட்டுமிராண்டிகள் என்பது அவர்கள் பேச்சிலேயே தெரிகிறது. நீங்கள் காப்பாற்றவில்லை என்றால் இந்த இருவரும் எங்களைச் சாப்பிட்டு விடுவார்கள்" என்று இருவரும் மனதில் வேண்டிக் கொண்டனர்.

இரண்டு காட்டுமிராண்டிகளும் குடிசை வாசலில் படுத்திருந்ததால் சிறுவர்களால் தப்பித்து ஓட முடியவில்லை. பயத்தினால் இரவு முழுவதும் அவர்கள் தூங்கவேயில்லை.

காலையில், ஒல்லியாக இருந்த காட்டுமிராண்டி சிறுவர்கள் ஒளிந்திருந்த இடத்தினருகே வந்தான்.

"சீக்கிரம் வெளியே வாங்க. உங்க முகமே நீங்க ரொம்பவும் ருசியா இருப்பீங்கன்னு சொல்லுது" என்றான்.


சிறுவர்கள் இருவரும் பயந்தபடியே குடிசை வாசலில் வந்து பார்த்தனர். அங்கே பெரிய பாத்திரத்தில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்த சிறுவர்கள், குண்டாக இருந்த காட்டுமிராண்டி எங்கோ சென்றிருப்பதை அறிந்தனர்.

"நாங்க உங்களுக்கு உணவாகப் போறதைப் பற்றி சந்தோஷமே! உங்களுக்காவது பயன்படறோமே? இருந்தாலும் தண்ணி நல்லா கொதிக்கிறதான்னு பாருங்கள்" என்று ஒரு சிறுவன் கூற; ஒல்லியான காட்டுமிராண்டி, பாத்திரத்தை எட்டிப் பார்த்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் மற்றொரு சிறுவன் அக்காட்டுமிராண்டியின் கால்களைத் தட்டி விட்டான். அப்படியே சுடு நீரினுள் அவன் விழுந்தான்.

புயல் வேகத்தில் சிறுவர்கள் இருவரும் ஓட்டமெடுத்தனர். ஒருவழியாகக் காட்டின் முடிவில் இருக்கும் நெடுஞ்சாலைக்கு வந்து சேர்ந்தனர். எதிரே வந்து கொண்டிருந்த லாரியை நிறுத்தி நடந்த விவரத்தை எல்லாம் கூறி அவர்கள் தங்கியிருந்த ஓட்டலின் பெயரையும் கூறினர். உள்ளே ஏறி பயணமாகி பத்திரமாகப் பெற்றோரிடம் வந்து சேர்ந்தனர்.

— அ.சு. கிருஷ்ணன்



# எனக்குத்தான் பெரிய குவியல்!

அடர்ந்த காட்டில் மைனா ஒன்று வசித்து வந்தது. அது மிகுந்த உழைப்பாளி. பக்கத்திலேயே கொஞ்சம் நிலத்தைப் பண்படுத்தி, கோதுமை விதைத்துப் பயிர் செய்தது. தானியத்தைச் சேமித்து வைத்து, வருடம் முழுவதும் கவலைப்படாமல் உண்டு மகிழ்ந்திருந்தது.

அதைக் கண்ட ஒரு சோம்பேறிக் காகம், அதனிடம் வந்து, "சகோதரியே! என்னையும் சேர்த்துக் கொள். இருவரும் வயலில் வேலை செய்வோம். விளைச்சலை ஆளுக்குப் பாதியாகப் பங்கு போட்டுக் கொள்வோம்...." என்றது.

தன்னுடன் வேலையைப் பகிர்ந்து கொள்ள இன்னொரு நபர் கிடைப்பதை எண்ணி மகிழ்ந்த மைனா, காகத்தைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டது.

காகம் ஒரு முழுச் சோம்பேறி. அதோடு கபட குணம் உடையது. ஆனால், இந்த உண்மை மைனாவுக்குத் தெரியவில்லை. ஆனால், பக்கத்து மரத்தில் வசித்து வந்த அணிலுக்கு நன்கு தெரியும். எனவே அது மைனாவிடம் போய், "காகம் மிகவும் மோசமான குணம் உடையது. அதைக் கூட்டுச் சேர்த்துக் கொள்ளாதே" என்று தடுக்க முயன்றது.

அதற்கு மைனா, "இனி என்ன செய்ய முடியும்...? கூட்டுச் சேர்த்துக் கொள்வதாகக் காகத்திடம் வாக்குக் கொடுத்து விட்டேனே...?" என்று கூறிவிட்டது.

ஒருநாள் நல்ல மழை பெய்தது. மைனா காகத்திடம் போய், "நிலம் ஈரமாகி மென்மையாகி விட்டது. உழுவது சுலபம். வா... நிலத்தை உழுதுவிட்டு வரலாம்..." என்றழைத்தது.

காகத்துக்கு வேலை செய்யத் துளியும் விருப்பம் இல்லை. எனவே, அது "நேற்று கால் சுளுக்கிக் கொண்டு ஊன்றவே முடியவில்லை. நீ மட்டும் போய் வயலை உழுதுவிட்டு வா... சுளுக்கு சரியானதும் வந்து சேர்ந்து கொள்கிறேன்..." என்று நொண்டிச் சாக்குச் சொல்லியது.

கள்ளம் கபடமற்ற மைனா, காகம்

ஜானகிமணாளன்




கூறியதை அப்படியே நம்பிவிட்டது. எனவே, தனியாகச் சென்று ஒண்டியாகவே வயல் முழுவதையும் உழுது முடித்தது.

மறுநாள் வயலில் விதை விதைக்க வேண்டும். மைனா காகத்திடம் வந்து, ''இன்று காலுக்கு எப்படி இருக்கிறது...? தேவலாமா...? நீயும் வருகிறாயா, விதை விதைக்க...?'' என்று அழைத்தது.

காகம் அன்றும் கபடமாக நடித்தது. "என் கால் இன்னும் பூரண குணமாகவில்லை. நீ போய் விதை விதைத்து விட்டு வா... கால் சரியானதும் வருகிறேன்...'' என்றது.

மைனா அப்போதும் காகத்தின் வார்த்தைகளை நம்பி விட் டது. தனியாகவே சென்று வயலில் விதை விதைத்தது.

சில நாட்களில் வயலில் சின்னஞ்சிறு கோதுமை நாற்றுகள்



முளைத்தன. இடையிடையே புற்களும் கிளம்பியிருந்தன. அதைப் பார்த்த மைனா காகத்திடம், ''சகோதரா! உனக்குக் கால் சுளுக்கு சரியாகி விட்டது போலிருக்கிறதே...! வயலுக்கு என்னுடன் வருகிறாயா...? களையெடுத்து விட்டு வரலாம்..?'' என்று அழைத்தது.

உடனே காகம், "நான் என்ன செய்வேன் மைனாவே...? நேற்றுத்தான் கால் சுளுக்கு சரியாயிற்று... அதற்குள் பார்.. நேற்று இரவே காய்ச்சல் வந்து விட்டது. கண்களைப் பார்... திறக்கக் கூட முடியவில்லை..." என்று நடித்தது.

காகம் நடிக்கிறது என்பதை மைனா புரிந்து கொள்ளவில்லை. எனவே, அது, "அடப்பாவமே! நீ வர வேண்டாம். நான் மட்டும் போகிறேன்...." என்றவாறு, வயலுக்குப் போய்க் களையெடுத்து முடித்தது.

சில நாட்களில், கோதுமைப் பயிர் நன்றாக உயரமாக வளர்ந்து விட்டது. பொன்னிறக் கதிர்களும் தோன்றி விட்டன. பயிர் தளதளவென்று காற்றில் ஆடியது.

மைனா, நாள் முழுதும் வயலிலேயே தங்கியிருந்து, பயிரை நன்றாகப் பராமரித்தது. ஆனால், அப்போதெல்லாம் கூட காகம் வயலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், தனது கூட்டில் அமர்ந்து நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.


இன்னும் சில நாட்கள் கடந்தன. கோதுமைக் கதிர்கள் நன்கு முற்றிப் பக்குவப்பட்டு விட்டன. மைனா மீண்டும் காகத்திடம் வந்தது. "காகமே! காகமே! வா போகலாம். எந்த நேரத்திலும் மழை பிடித்துக் கொண்டு விடலாம். அதற்குள் போய்க் கோதுமையை அறுவடை செய்து விட வேண்டும்... வா..." என்று அழைத்தது.

''நான் என்ன செய்வேன், மைனாவே? இன்றும் சளி பிடித்துக் கொண்டு விட்டதே! இருந்தாலும், பரவாயில்லை... நீ போய்க் கொண்டே இரு... நான் உன் பின்னாலேயே கொஞ்ச நேரத்தில் வந்து விடுகிறேன்...'' என்றது. ஆனால், அது கூட்டை விட்டுக் கிளம்பவேயில்லை.

எனவே, மைனா தனியாகவே சென்று பயிர் முழுவதையும் அறுவடை செய்தது. அறுவடையான கதிர்களைக் கனமான கைத்தடி கொண்டு அடித்து அடித்துத் தானியம் வேறாகவும், உமி வேறாகவும் பிரித்துக் குவித்தது.

பிறகு மைனா மீண்டும் காகத்திடம் சென்று, "காகமே, காகமே! கோதுமைத் தானியம் தயாராகி விட்டது. வருகிறாயா...? நமது ஒப்பந்தப்படி நாம் இருவரும் அதைப் பிரித்துக் கொள்ளலாம்...?" என்றழைத்தது.

காகத்திற்கு அளவிட முடியாத மகிழ்ச்சி! "அப்படியா...? ரொம்ப சரி... வருகிறேன். இன்று என் உடல்நிலை நன்றாகவே



குணமடைந்து விட்டது. போவோமா...?" என்றவாறு துள்ளிக் குதித்துப் புறப்பட்டது.

வயலுக்குச் சற்று தூரத்தில் வரும் போதே அங்கு கிடந்த இரண்டு குவியல்களையும் காகம் பார்த்து விட்டது. ஒன்று உயரமான பெரிய குவியல். மற்றொன்று குட்டையான சிறிய குவியல். அவற்றைக் கண்டதும் காகம் பெரிய குவியலை எப்படியாவது தானே அடைந்து விட வேண்டும் என்று நிச்சயித்தது. எனவே அது உரத்த குரலில், "உருவத்தில் நான் மிகவும் பெரியவன். ஆகவே, உயரமான பெரிய குவியல் என்னைத்தான் சேர வேண்டும்..." என்று உரிமை கோரியது.

உடனே மைனா, "ஆனால்... நான் இன்னும்..." என்னவோ சொல்லத் தொடங்கியது.

அதைப் பேச விடாமல் இடைமறித்த காகம், "ஆனால்.. கினால் எல்லாம் வேண்டாம். பெரிய குவியலை நான்தான் எடுத்துக் கொள்வேன்..." என்றது உறுதியாக.

அப்போது, பக்கத்தில் ஒரு மரத்திலிருந்து ஏதோ குரல் கேட்டது. "காகம் சொல்வதுதான் சரி... அது பெரிய உருவம் உடையது. எனவே பெரிய குவியல் அதற்குத்தான் சேர வேண்டும்..."

இப்படிக் கூறியது அணில்தான்!

உடனே காகம்; "நல்லது அணிலே...! சரியாகச் சொன்னாய்... நீயே சாட்சி.. பெரிய குவியல் எனக்குத் தான்..." என்று கும்மாளமிட்டுக் கூறியது...


மைனா - காகம் - அணில் மூன்றும் குவியல்களை நோக்கி விரைந்து நடைபோட்டன.

அருகில் போன பிறகுதான் உயரமான அந்தப் பெரிய குவியல் வெறும் உமிக் குவியல் என்பது, காகத்துக்குப் புரிந்தது!

உடனே அது பதறிப் போய், "இது வெறும் உமியாக அல்லவா இருக்கிறது...? எனக்கு வேண்டாம்" என்று பிடிவாதம் பிடித்தது.

"இந்த உமியைப் பெறும் அளவுக்குக் கூட நீ வேலை செய்யவில்லையே...?" என்ற அணில், "நான் மரத்திலிருந்து பார்த்துக் கொண்டு தானே இருந்தேன்? மைனா இத்தனை காலமாக எத்தனை கடுமையாக உழைத்தது? அப்போதெல்லாம் நீ உன் கூட்டிற்குள் சோம்பிக் கிடந்தாய்... சௌக்கியமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாய்... யார் எதை விதைக்கிறார்களோ, அதைத் தான் அறுவடை செய்வார்கள்... அவரவர் பங்கு அவரவர்களுக்கு... உழைக்க மறுத்து சாக்குப் போக்குச் சொன்ன உனக்கு உன்னுடைய கபடத்துக்கு ஏற்ற பங்கு தானே கிடைக்கும்? அதே நேரத்தில் மைனாவுக்கு அதன் உண்மையான உழைப்பின் பங்கு முழுவதுமாகக் கிடைத்து விட்டது பார்த்தாயா?" என்றது.

காகம் அவமானத்தால் தலையைக் கவிழ்த்துக் கொண்டு, வருத்தத்துடன் நகர்ந்தது!



"என்னடா இது! ரெண்டு டீம்காரங்களும் இத்தனை கோபமா இருக்காங்க? என்ன ஆச்சு இவங்களுக்கு?"


"பின்னென்ன மேன் ஆஃப்தி மேட்ச்சை அம்பயருக்கு கொடுத்துட்டாங்களாமே!"

- சக்தி சரவணன்

# குழந்தைக் கவிஞர் விருது!

ஆண்டுதோறும் அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் பெயரால் இந்தியன் வங்கி வழங்கும் ரூபாய் ஐந்தாயிரமும், குழந்தைக் கவிஞர் விருதும் சிறந்த குழந்தைக் கவிஞரும் பல நூல் ஆசிரியருமான திரு. பி.வி. கிரி அவர்களுக்குக் கிடைத்துள்ளது. இது 1994 ஆம் ஆண்டுக்கான விருது. இதே போல் குழந்தை எழுத்தாளர் சங்கம் வழங்கும் சிறுவர் இலக்கிய மாமணி விருது, மாணவராக இருந்தபோதே குழந்தைப் பத்திரிகை ஆசிரியராக இருந்ததோடு எத்தனையோ குழந்தை எழுத்தாளர்கள் உருவாகக் காரணமாக இருந்து ஊக்குவித்தவருமான பல நூல் ஆசிரியர் திரு. ஜெ. எத்திராஜன் அவர்களுக்கும், 300 நூல்களுக்கு மேல் எழுதி, யுனேஸ்கோ பரிசு உட்பட பல பரிசு களைப் பெற்றவரும், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்து சிறுவர் இலக்கியப் பயிலரங்கம் நடத்திய பெருமைக்கு உரியவருமான 85 வயது நிறைந்த முதுபெரும் சிறுவர் இலக்கியப் படைப்பாளி கல்வி கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்கான விழா மே 21 ஆம் நாள் இந்து அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு புலவர் செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இதே விழாவில் நீதியரசர் பி.எஸ். கைலாசம் நினைவுப் பரிசும் வெற்றி பெற்ற மாணவியருக்கு வழங்கப்பட்டது.

விருது பெற்றவர்களைப் பாராட்டி மகிழ்வதுடன் இப் பரிசு வழங்கி வரும் இந்தியன் வங்கியையும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தையும் பாராட்டுகிறோம்.



* அமைச்சரிடம் விருது பெறுவோர் கல்வி கோபாலகிருஷ்ணன், பி.வி. கிரி, ஜெ. எத்திராஜன்.

# கிளிசரினால் கண்ணுக்கு ஆபத்து வருமா?

● க. வரதராஜன், மன்னார்குடி.


*? டாக்டர், சாப்பிட்டு முடிந்ததும் ஏப்பம் வந்து விட்டால் வயிறு முழுவதுமாக நிரம்பி விட்டது என்று அர்த்தமா?*

! இல்லை, வரதராஜன். வயிறு நிரம்புவதற்கும் ஏப்பம் வருவதற்கும் தொடர்பில்லை. நம் இரைப்பையில் உள்ள காற்று வாய் வழியாக வெளியேறுவதையே 'ஏப்பம்' என்கிறோம். நாம் சாப்பிடும்போது சிறிதளவு காற்றையும் சேர்த்து விழுங்கி விடுவதுண்டு. தண்ணீர் குடிக்கும் போதும் அப்படித்தான். குளிர் பானங்களைக் குடிக்கும் போது அவற்றில் கரைந்துள்ள வாயு இரைப் பைக்குச் சென்றதும் விடுபட்டு விடுகிறது. இப்படிப் பல வழிகளில் சேருகின்ற காற்று அளவுக்கு மீறி இரைப்பையை அடைத்து விடுமானால், அது உணவை ஒதுக்கிக் கொண்டு உணவுக் குழாய்க்கு வந்து 'ஏவ்வ்வ்....' என்ற ஏப்பமாக வெளியேறுகிறது. பெரும்பாலும் அவசரமாகவும், வேக வேகமாகவும் சாப்பிடுவோர்க்கு இது அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, உணவை மெதுவாக, நன்றாக மென்று சாப்பிட்டால் ஏப்பம் வராது. தவிர சிலருக்கு இரைப்பையில் புண் இருந்தாலும், அஜீரணக் கோளாறு ஏற்பட்டாலும் ஏப்பம் வரலாம். இவற்றுக்கு மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொண்டால் ஏப்பம் குறையும்.

● கோ. ஆனந்தன், சேரன்மாளிகை.

*? "Transplantation" என்பது என்ன, டாக்டர்?*

! இந்த வார்த்தைக்கு நேரடியான பொருள் "மாற்றி வைத்தல்" என்பது. ஆனால், மருத்துவத்துறையில் இது "உறுப்பு மாற்றுச் சிகிச்சை" என்ற பொருளில் பழக்கத்தில் உள்ளது. எடுத்துக்காட்டாக, "Kidney Transplantation" என்று கேள்விப்பட்டிருப்பாயே? இது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையைக் குறிக்கும். அதாவது ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்து விட்டால் அதை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விட்டு, ஆரோக்கியமான மற்றொரு நபரிடமிருந்து ஒரு சிறுநீரகத்தைப் பெற்று அந்த நபருக்குப் பொருத்துவதை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்கிறோம். இது போல் கண்ணில் உள்ள கருவிழி (Cornea)யை மாற்றும் சிகிச்சைக்கு "Cornea Transplantation" என்றும், கல்லீரல் மாற்று சிகிச்சைக்கு "Liver Transplantation" என்றும் பெயரிடப்பட்டுள்ளன.



● என். ராஜலட்சுமி, மேலப்பாதி.


*? நாடகங்களிலும், சினிமாக்களிலும் அழுகைக் காட்சிகளுக்காக கண்களில் கிளிசரின் ஊற்றிக் கொள்கிறார்களே,*

***இதனால் கண்களுக்கு ஆபத்து வராதா, டாக்டர்?***

! கிளிசரின் கண்களை உறுத்துவதால் தான் அழுகைக் காட்சிகளுக்குத் தேவையான கண்ணீரே சுரக்கிறது. ஆக, இது முதல் தீமை. அடுத்த தீமை ஒவ்வாமை (Allergy). மூன்றாவது கிளிசரினை அளவுக்கு மீறிப் பயன்படுத்தினால் விழிவெண்படலத்தில் அழற்சி ஏற்பட்டு கண்கள் ஆப்பிள் பழம் போல் சிவந்து வீங்கிவிடும். ஆனால் ஒன்று, இதனைக் குறிப்பிட்ட அளவில் மட்டும் பயன்படுத்தினால் அவ்வளவாக பாதிப்பு ஏற்படுத்துவதில்லை.

● **ஜெ. அமுதா, ஆரணி.**

***? எங்கள் வீட்டில் கடந்த 3 ஆண்டுகளாக ஆழ்குழாய்த் தண்ணீரையே (Bore Well Water) குடித்து வருகிறோம். அது உப்புத் தண்ணீர். சமீபத்தில் என் உறவினர் ஒருவர் உப்புத் தண்ணீரைத் தொடர்ந்து குடித்தால் சிறுநீரகம் பாதிக்கப்படும் என்றார். அதிலிருந்து எங்களுக்குக் கலக்கமாக உள்ளது. இது உண்மையா? விளக்கம் தேவை. டாக்டர்!***




! உப்புத் தண்ணீரில் கால்சியம் சத்து அதிகமாக இருக்கும். இதனால் சிறுநீரகக் கற்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும். இதற்காகக் கலங்க வேண்டியதில்லை, அமுதா. உங்கள் வீட்டுத் தண்ணீரைக் கொதிக்க வைத்து, ஆற வைத்து, வடிகட்டிச் சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் ஏற்படவும் வழியில்லை. மற்றபடி உப்புத் தண்ணீரால் பயப்படும்படியாக வேறு எந்த பாதிப்பும் உண்டாவதில்லை.

● **கெ. சின்னதுரை, பரமனந்தல்.**

***? தொல்லை அதிகம் இருந்தால் நோய்கள் உண்டாகும் என்று கூறுகிறார்கள், டாக்டர், இது உண்மையா?***

! நூற்றுக்கு நூறு உண்மை, தம்பி! தொல்லையால் வருகின்ற தொல்லைகளை ஒரு பக்கத்திற்கு அடுக்கலாம். என்றாலும் முக்கியமானவற்றை மட்டும் இங்கு சொல்கிறேன், கேள். உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மாரடைப்பு, இயக்குநீர்க் கோளாறுகள், குதிகால் வலி, முழங் கால் வலி, இடுப்பு வலி, முதுகு வலி கழுத்து வலி, குடலிறக்கம், கால்களில் ரத்தக் குழாய் வீக்கம், தோல் வியாதிகள், பித்தப் பையில் கற்கள், பக்கவாதம், சிற்றெலும்பு மூட்டு வலி (Gout), தட்டைப் பாதம் இத்யாதி, இத்யாதி... சுருக்கமாகச் சொல்லப் போனால் உலக சுகாதார நிறுவனம் அண்மையில் தெரிவித்திருக்கின்ற ஒரு புள்ளி விவரப்படி இயல்பாக உள்ளவர்களை விட தொல்லை அதிகம் உள்ளவர்களுக்கு 10 வருடங்கள் ஆயுள் குறைவு. ஆகையால் 'தொல்லையைக் குறைப்போம்; தொல்லைகளைத் தவிர்ப்போம்' என்பதை இளம் வயதிலிருந்தே ஒரு தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டியது முக்கியம், சின்னதுரை!

**டாக்டர் கு. கணேசன்**




✉ "சிங்கப்பூர் சட்டை"யைப் படித்து முடித்ததும் எனக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லையே என்ற ஏக்கம் எழுந்தது. படங்கள் பேசின - சோழன் மாளிகை கோ. ஆனந்தன், மேலப்பாதி எஸ். நாகராஜன், விருத்தாச்சலம் வி. பிரபாகர், ஆர். பிரசன்னகுமார், புத்திராம்பட்டு கோ. மதிவாணன், தோப்புத்துறை ந. ஆனந்தராஜ், காட்டுமன்னார்கோயில் நிள. அன்புதேவன், உளத்தங்கரை பி. கோவிந்தசாமி.

✉ "ஊனம் ஒரு தடையல்ல" என்பதை மிக அழகாக வலியுறுத்தியது பூவை அமுதனின் 'என் பங்கு' சிறுகதை - விருத்தாசலம் வி. பிரபாகர், ஆர். பிரசன்னா, தோப்புத்துறை ந. ஆனந்தராஜ்.

✉ "கடலைக் கலக்கிய குட்டி ராணி" படமும் கட்டுரையும் பிரம்மாதம். ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்ற எழுச்சியை ஊட்டியது - திண்டுக்கல் ந. முத்துச்சாமி, மேலப்பாதி என். ராஜி, இராமேஸ்வரம் சுபா, விருத்தாச்சலம் வி. பிரபாகர், புத்திராம்பட்டு கோவி. மதி, உளத்தங்கரை பி. கோவிந்தசாமி.

✉ 'காடை' பற்றிய அறிவியல் பகுதி வியப்பில் ஆழ்த்தியது - உளத்தங்கரை பி. கோவிந்தசாமி, விருத்தாச்சலம் வி. பிரபாகர், ஆர். பிரசன்னா, மேலப்பாதி எஸ். நாகராஜன், கீழ்க்கடம்பிஸ்தலம் என். ராமநாதன், சோழன் மாளிகை கோ. ஆனந்தன்.

✉ "சட்டி முடியார் சாபத்"தை ஏன் முடிக்கவில்லை? மனதெல்லாம் அடுத்த இதழ் எப்போ வரும் என்று எதிர்பார்க்க வைக்கிறது - பாளையங்கோட்டை ஆர். மோகனசுந்தர், சோழன் மாளிகை கோ. ஆனந்தன், விருத்தாச்சலம் வி. பிரபாகர், பிரசன்னா.

✉ "மீண்டும் பிருந்தாவனம்" வருவதை இரு கரம் நீட்டி வரவேற்கிறோம் - சோழன் மாளிகை கோ. ஆனந்தன், மேட்டுப் பாளையம் வி. சுந்தரி, உளத்தங்கரை பி. கோவிந்தசாமி.

✉ எஸ்.ஆர்.ஜி. "சுந்தரத்தின் வேடிக்கைக் காகத்தான்" நாடகம் நிறைய சிந்திக்க வைத்தது - கடத்தூர் கே. பாண்டியன், சின்ன சேலம் ஆர். பிரசன்ன குமார், செம்பனார்கோயில் எம். ஜெயபால்.

✉ வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற என்னுடைய கதையான 'படிப்பை விடவா?' வில் என் பெயரைப் போடாமல் ஜெ. கணேசன் என்று போட்டு விட்டீர்களே! - ரெட்டியூர் ஜெ. கண்ணன்

*(இப்பொழுது சரிதானே! கவனக் குறைவுக்கு வருந்துகிறோம் - ஆசிரியர்)*

✉ "படிப்பை விடவா?" கதை முழு நிறைவைத் தந்தது - விருத்தாசலம் வி. பிரபாகர், தாசுகுப்பம் சே. ராசா, செம்பனார்கோயில் ஜெ. ஜம்மு.

✉ பொன்ராசனின் "வாருங்கள்" பாடல் மிக அருமை. நம் இந்திய தேசத்திற்கு சரியான வழிகாட்டும் தலைமை இல்லை என்பதும், மறைந்த தேசத் தலைவர் நேருவை வழிகாட்ட மீண்டும் குழந்தைகள் ஏங்கி அழைப்பதும் மிகவும் அருமை! வ(ள)ரும் தலைமுறை நேருவைப்போல சிறந்த தலைவராக உருவாக இந்தப் பாடல் வித்தாக அமையும் - குன்றக்குடி கி. சிங்காரவடிவேல், குன்றக்குடி அடிகளார் அலுவலகம்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; பிரதம நிர்வாக அதிகாரி : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.


எனக்கும்
கொஞ்சம்
வைடா!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka



